Presented By S. Amirtharajah
UNIVERSITY OF JAFFNA CEYLON

சோவியத் ஜனநாயகம் செயல்படும் விதம்

# ஜன நாய கம்

சோவியத் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன

NP

யூரி நவும்கின்

248 A

யூரி நவும்கின்

PRESENTED BY S. AMIRTHARAJAH
UNIVERSITY OF JAFFNA
CEYLON / SRI-LANKA
1981.

# சோவியத் சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படுகின்றன

இலங்கை ஜனநாயக சோஷலிசக்
குடியரசின் சோவியத் ஸ்தானிகராலயத்தின்
தகவற் துறையினரால் வெளியிடப்பட்டது.

1980 ஆகஸ்ட்

பிரகதி அச்சகம் :
93, மாளிகாகந்த ரோட்,
கொழும்பு-10.

# பொருளடக்கம்


சாம்ராஜ்ய சட்டத்திலிருந்து
மக்கள் சட்டத்திற்கு 05

நாடு தழுவிய விவாதமுறை 15

சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களும்
அங்கக் குடியரசுகளின் சட்டங்களும் 27

சோவியத் நாடாளுமன்றம்
எவ்வாறு செயல்படுகிறது? 33

ஒவ்வொருவருக்கும் சட்ட அறிவு 49

# சாம்ராஜ்ய சட்டத்திலிருந்து மக்கள் சட்டத்திற்கு

## ருஷ்யாவின் பிரஜைகளுக்கு!

தற்காலிக அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு விட்டது. பெத்ரோகிராட் தொழிலாளர், படைவீரர் பிரதிநிதிகள் சோவியத்தின் அங்கமான பெத்ரோகிராட் பாட்டாளி வர்க்கம் மற்றும் காவற்படைக்குத் தலைமைதாங்கும் புரட்சிகர இராணுவக் குழுவின் கைகளுக்கு அரசு அதிகாரம் மாறிவிட்டது.

மக்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடினார்களோ, அதாவது, உடனடியாக ஜனநாயக சமாதானம் வழங்கப்பட வேண்டும், நிலவுடைமை ஒழிக்கப்படவேண்டும், உற்பத்தியின் மீது தொழிலாளர் கட்டுப்பாடு, சோவியத் ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்பது—இந்த இலட்சியம் எய்தப் பெற்று விட்டது.

**தொழிலாளர், படைவீரர், விவசாயிகளின் புரட்சி நீடூழி வாழ்க!**

*தொழிலாளர், படைவீரர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராட் சோவியத்தின் புரட்சிகர இராணுவக் குழு, 1975 அக்டோபர் 25, காலை 10 மணி*

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தாக்கீது லெனினால் எழுதப்பட்டது.

1917ம் ஆண்டின் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி ருஷ்ய சாம்ராஜ்ய சட்ட அமைப்பை ஒழித்தது. புதிய அமைப்புக்கும் சமுதாயத்திற்கும் புதிய சட்டங்கள், உழைக்கும் மக்களின் தேவைகள், நலன்களைத் திருப்தி செய்யும் சட்டங்கள் தேவைப்பட்டன. சோவியத் ஆட்சி ஆரம்ப நாட்களிலேயே ஒரு புரட்சிகர சட்டத்தின்படியான ஆட்சியை நிறுவ நிர்ணயகரமான நடவடிக்கைகளை எடுத்தது; அதனது சொந்த சட்ட அமைப்பை உருவாக்கும் கடமையின் தொடக்கமாக இது அமைந்தது.

## புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கு

1917, நவம்பரில் சோவியத் அரசின் ஸ்தாபகர் லெனின் எழுதினார்:"...புதிய ஆட்சி பரந்த வெகுஜனங்களின் அபிலாஷைகள், நம்பிக்கைகளை நிறைவு செய்வதற்காக சட்டங்களைப் பிறப்பிப்பது மூலம் வாழ்க்கையின் புதிய வடிவங்களின்வளர்ச்சியில் மைல்கற்களை அமைத்து வருகிறது.(1)" பின்னர் சோஷலிஸப் புரட்சியின் வெவ்வேறு கட்டங்களின் அனுபவத்தைத் தொகுத்துக் கூறுகையில், அவர், "நாம் எதை, எவ்வாறு நிர்மாணிக்க விரும்புகிறோம், இதுவரை காணாத விஷயங்களை அடைய நாம் முயன்றுவருகிறோம் என்பதை மக்களுக்குக் காட்டுவதற்கு (2)" இத்தகைய ஆணைகள் அவசியம் என்றார்.

1917 நவம்பருக்கும் 1918 ஜனவரிக்குமிடையில் சோவியத் அரசாங்கம் ஒவ்வொரு நாளும் பல முடிவுகள், ஆணைகளை—சில வேளைகளில் ஒரே நாளில் பத்து, பன்னிரெண்டு, அல்லது அதற்கு அதிகமாகவும்—வெளியிட்டது. அவற்றில் பெரும்பான்மையானவை, சமுதாயத்தை சோஷலிஸ முறையில் புனரமைப்பது,புரட்சிகர ஆதாயங்களைப் பாதுகாப்பதுபற்றிய திட்டவட்டமான பிரச்னைகள் பற்றியனவாய் இருந்தன. அவை மையத் திணைக்களங்கள், ஸ்தல ஆட்சி உறுப்புக்களுக்கு—தொழிலாளர், விவசாயிகள், படைவீரர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்—வழிகாட்டும் நடைமுறை விதிமுறைகளின் தொகுப்பாயமைந்தன. அதே சமயம் இந்த ஆரம்ப காலகட்டத்தில் மக்கள் கமிஸார்

---

1 வி. இ. லெனின், தொகுப்பு நூல்கள், தொகுதி 26, ப. 287,

2 அதே நூல், தொகுதி 38 பக். 73

சபை (3) வெளியிட்ட முடிவுகள், ஆணைகளிடையே கட்சி வேலைத் திட்டத்தின் முத்திரை கொண்ட ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவை குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றியதாக இல்லாமல், சட்ட வடிவில் சோவியத் சமூக, அரசு ஒழுங்கின் அடிப்படைக் கோட்பாடுகளையும் சமுதாயத்தை சோஷலிச முறையில் புனரமைப்பதன் அடிப்படையான பொதுக் கோட்பாடுகளையும் பிரகடனஞ் செய்வதையும் உருவகம் பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

சமாதான ஆணை அரசின் சமாதானபூர்வ அயல்துறைக் கொள்கைக்கு அடிப்படையாகவுள்ள கோட்பாடுகளைப் பிரகடனஞ் செய்தது. நிலம் பற்றிய ஆணை நில உடைமை சம்பந்தமான ஒரு புதிய ஒழுங்கை நிறுவியது; நிலம் அனைத்தும் மக்களின் சொத்தாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது, நிலவுடைமையாளர்களின் தோட்டங்கள் ஒழிக்கப்பட்டன; நிலத்தில் உண்மையிலேயே வேலைசெய்தவர்களுக்கு நிலம் இலவசமாக வழங்கப்பட்டது. புதிய சமூக அமைப்பின் அடிப்படையை வகுத்த கட்சியின் வேலைத்திட்டத்திலிருந்து தோன்றிய சட்டங்களில் ஒன்று ''தொழிலாளர் கட்டுப்பாடு பற்றிய விதிகள்'' பற்றி விளக்கியது. தேசியக் கொள்கையின் கோட்பாடுகளும், தேசங்களின் சுயநிர்ணய உரிமை வரையில் நாட்டின் சகல தேசங்கள், மக்கள் இனங்களின் சமத்துவமும் ருஷ்ய மக்களினங்களின் உரிமைகள் பிரகடனத்தின் மூலம் எய்தப்பெற்றன. விசேட ஆணையொன்று சகல கோஷ்டி சலுகைகள், கட்டுப்பாடுகளை ஒழித்துக் கட்டியது. பொதுவாழ்வு, அரசு வாழ்வை ஒழுங்கமைப்பது குறித்த திசைவழி— அதனை வெவ்வேறு அம்சங்களில்— நீதிமன்றங்கள், சிவில் மணம், குழந்தைகள், மனச்சாட்சி சுதந்திரம் மற்றும் பிற விஷயங்கள் பற்றிய ஆணைகளால் வழங்கப்பட்டன. அரசாங்கமும், சகல அரச நிறுவனங்களும்

---

3 லெனினின் தலைமையிலான முதலாவது சோவியத் அரசாங்கமாக விளங்கிய அமைப்பு.

மக்கள் அனைவருக்கும் நெருக்கமாக இருக்கவேண்டியதன் அவசியத்திற்கு லெனின் பெரும் முக்கியத்துவம் கொடுத்தார். அவரே, அவ்வளவு வேலையில் ஈடுபட்டிருந்த போதிலும், தொழிற்சாலைகள், ஆலைகள், தொலைதூர நகரங்கள், கிராமங்களிலிருந்து வரும் தூதுக்குழுக்களைச் சந்தித்தார். அவரின் செயலகத்திற்கு பெரும் வேலைப்பளு ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் ஆட்கள் வருவர், ஏராளமான கடிதங்கள் வரும். அவற்றில் ஒன்றுகூட பதிலளிக்காமல் விடப்படமாட்டாது.

இந்தச் சந்திப்புகளும் கடிதங்களும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளின் நிலைமை குறித்தும், சோவியத் ஆட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளில் மக்களின் மனோபாவம் குறித்தும் மதிப்பிடற்கரிய தகவல்களைத் தந்தன. அவை நிறைய ஸ்தூலமான ஆலோசனைகள், பிரேரணைகளை அளித்தன: இவை பரிசீலனைக்குப் பின்னர் அடிக்கடி புதிய சட்டங்கள், அரசு முடிவுகள், தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு இட்டுச் சென்றன.

உதாரணத்திற்கு ஒன்றைக் காட்டலாம். கிரெம்ளினில் உள்ள லெனினுடைய வரவேற்பறை (இது இப்போது நினைவு மண்டபம்) பதிவேட்டில் அவருடைய செயலாளரின் கையெழுத்தில் ஒரு சாதாரண உழைக்கும் பெண்மணியின் ஆலோசனை பதியப்பெற்றுள்ளது. கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு வேலை நேரத்தில் சிறிது ஓய்வுபெற ஏதாவது செய்யவேண்டும் என்று இந்த ஆலோசனை கூறிற்று. லெனினின் தீர்மானம் கூறுகிறது. "தொழிலாளருக்கான மக்கள் கமிஸாருக்கு". அதன் பின் சிறிது காலத்தில் இப்பிரச்னை சம்பந்தமான ஆணை சோவியத் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டது. உழைக்கும் மக்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்வது எப்போதுமே அரசின் லெனினிய—பாணி செயல்பாட்டின் முக்கிய கூறுக, சகல அரசு, பொது உறுப்புகளின் பணியில் ஒரு நிலையான, கட்டாயமான கோட்பாடாக இருந்து வந்துள்ளது.,

1919லிருந்து 1946வரையிலான காலகட்டத்தில் நாட்டின் மிகவுயர்ந்த சட்டவாக்க உறுப்பின், சோவியத் ஒன்றிய சுப்ரீம் சோவியத்தின் தலைவராக (1) அதாவது, நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் மிகையில் கலினின். விவசாயப் பூர்வீகமுடையவரும், பெத்ரோகிராடில் முன்னர் பொருத்து வேலை செய்தவரும், புரட்சியைத் தொழிலாகக் கொண்டவருமான அவர் மக்களின் தேவைகள், நம்பிக்கைகளை நன்கு அறிந்திருந்தார். மாஸ்கோ, மகோவேயா தெருவில் இருந்த அவரது அலுவலகக் கதவுகள் எல்லோருக்கும் திறந்திருந்தன.

அவர் தனது விடுமுறை நாட்களில் த்வெர் மாநிலத்திலுள்ள (தற்போது கலினின் பிராந்தியம்) தன் சொந்தப் பிரதேசத்திற்கு அடிக்கடி விஜயஞ் செய்தார். அவ் வேளையில் பல தொழிலாளர்கள்—ஆண்களும் பெண்களும்—தொழிற்சாலைகளில் தமது மாற்றுவேலைகளை முடித்துக் கொண்டு, தமது சிறு தோட்டத்தில் விளைவதை விற்பது, தையல் வேலை செய்வது, பொருட்களை இறக்குவது போன்றவற்றின் மூலம் சிறிது கூடுதல் பணம் ஈட்டினர். ஒரு நாள் ஸ்தல ஆலைத் தொழிலாளர்களை அதன் பொழுது போக்கு மன்றத்தில்—போல்ஷோய் பாட்டாளிகள் அரங்கு என அது படாடோபமாக அழைக்கப்பட்டது—கலினின் சந்தித்தார். அங்கு நிறைய ஜனங்கள் இருந்தனர். தொழிலாளிகளில் ஒருவர் ஜனாதிபதியிடம் சொன்னார்:

''இரட்டை வருமானங்களை விரும்புபவர்களுக்கு எதிராக நமக்கு ஓர் ஆணை தேவை''. ஒரு சோவியத் நபரின் வருமானம் அவர் வேலை செய்யும் இடத்திலிருந்து மட்டுமே, அரசிடமிருந்து பெறப்பட வேண்டும் என்பது அவரின் வாதம்.

---

(1) 1919 முதல் 1922 வரை அதியுயர் அதிகார அமைப்பானது அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் குழு எனவும் 1922 முதல் 1936 வரை சோவியத் ஒன்றியத்தின் மத்திய நிர்வாகக் குழு எனவும் அழைக்கப்பட்டது.

ஜனுதிபதி கவனமாகச் செவிமடுத்து பின்னர் கேட்டார்: ''ஓர் ஆணை தேவையெனகூறுகிறீர்கள்?''

''ஆம், அதுவே உண்மை. அப்போதுதான் ஒவ்வொருவரும் அரசின் சக்தியை உணருவர்.''

''இந்தத் தொழிலாளர்கள் அனைவரும் நல்ல நிலையில் இருப்பதனுலா இரட்டை. வருமானங்களைத் தேடுகிருர்கள்?''

பொதுவாக அங்கு சிரிப்பொலி எழுந்தது. புதிய ஆணையில் ஆர்வங்காட்டியவரிடமிருந்து இதற்குப் பதிலில்லை.

''உங்களில் எத்தனை பேருக்கு எதிராக இந்த ஆணை தேவைப்படுகிறது?''— ஜனுதிபதி கேட்டார.

''அநேகமாக இது அனைவருக்கும் பொருந்தும்''

கலினின் தனது தலையை அசைத்தார்.

''எனவே இதன் அர்த்தம், தொழிலாளர், விவசாயிகள் ஆட்சியின் ஓர் ஆணை, இந்த ஆட்சிக்காகப் போராடிய பெரும் பா.ன்மையான தொழிலாளருக்கு எதிராக இருக்கும்? ஓர் ஆணையை எழுதுவதென்பது வெளித் தோற்றத்தில் காணப்படுவதுபோல் அவ்வளவு எளிதானதல்ல. ஒரு துண்டு காகிதத்திற்கு எதுவித அதிகாரமும் இல்லை என்பது மெய்யே. அதன்மீது எழுதப்படும் எதுவும் நீடித்ததாக இருக்கவேண்டும். ஆனுல் மக்கள்? சோவியத் அரசின் சட்டங்கள் உழைக்கும் மக்களின் பெரும்பான்மையோருக்குரியதாக இருக்க வேண்டும். அதுவே முதல் விஷயம். ஆணைகளை வெளியிடுவதன் மூலம் நான் அமல்படுத்த விரும்பும் ஏராளமான விஷயங்களைப் பற்றி சிந்திக்கமுடியும். ஒரு நபரின் அல்லது சிறு மக்கள் குழுவின் விருப்பங்கள் ஒரு சட்டத்தை இயற்றுவதற்குப் போதிய அடிப்படையாகா. ஒவ்வொன்றையும்— ஓர் ஆலோசனையின் விளைவுகள், மக்களுக்கு, அரசுக்கு நமது கட்சிக் கொள்கைக்கு என்னவாக இருக்கும் என்பதை—சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இரண்டாவதாக, ஆணைகள் ஒரே ஒரு ஆண்

டுக்காக மட்டுமே இயற்றப்படுவதல்ல; மாருக அவை நமது பேரப்பிள்ளைகளுக்கும் பணிபுரிவதாக இருக்க வேண்டும். மூன்ருவதாக, ஜஙபதி சிறிது நிறுத்தி முறுவலித்தவண்ணம் சொன்னர்: ''நாம் ஏற்கனவே பல ஆணைகளை வெளியிட்டுள்ளோம், இந்தக் கூடுதல் ஒன்றைத்தவிர இவ்விஷயத்தில் அவசரப்பட்டுச் செய்வதற்குத் தடைவிதிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது, அல்லது நாம் ஒன்றுக்கொன்று முரணை தாக்கீதுகளை வெளியிட்டுக் கொண்டிருப்போம். எவ்வாருயினும் ஆணைகளை வெளியிடும் போக்கைக் கடைப்பிடிக்காமலேயே வாழ்க்கையில் பல குறைபாடுகளைப் போக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.''

இந் நிகழ்ச்சியில் சோஷலிஸ ஜனநாயகத்தின் பொருளையும் கோட்பாடுகளையும் காணலாம். சட்டங்கள் மக்களால், மக்களின் நன்மைக்காக இயற்றப்படுகின்றன, இத்தகைய அணுகுமுறை எமது நாட்டில் சட்டமியற்றும் நிகழ்வுப் போக்கு முழுவதற்கும் அடிநிலையாய் அமைந்துள்ளது.

தனது சட்டங்களை இயற்றும் போது சோவியத் ஆட்சி, அவற்றை எவ்வகையிலாவது மீறுவதை ஒரு கடும் குற்றமாக கருதுகிறது. அலெக்ஸாண்ட்ரா கொல்லந்தாய் (1) நினைவுகூர்ந்த பின்வரும் சம்பவம் இதுசம்பந்தமாக சுட்டிக்காட்டுவதாய் உள்ளது.

1918 ஜனவரியில் பால்டிக் கடற்படையைச் சேர்ந்த அராஜகவாதப் போக்குச் சார்புள்ள ஒரு குழு அரசாங்க டூமா (2)வின் இரு முன்னுள் உறுப்பி

---

(1) சோவியத் ராஜதந்திரி, சர்வதேச ருஷ்ய புரட்சிகர இயக்கத்தின் ஊழியர்.

(2) அரசு டூமா(1906—1917)—மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமுடைய பிரதிநிதித்துவ சட்ட சபை; 1905—07 புரட்சியினுடைய தாக்கத்தின் விளைவாக ஜாரிஸ அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது.

னர்களைக் கொன்றதற்குப் பொறுப்பாளியாக இருந்தது. இதைக் கேட்ட லெனினுக்குத் தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ''லெனின் இவ்வளவு ஆத்திரமடைந்தவராக, இவ்வளவு கோபமுற்றதை நான் இதற்கு முன் கண்டதில்லை'' கொல்லந்தாய் கூறுகிறார். ''வழக்கமாக ரத்தமின்றி வெளிறித் தோன்றும் அவரின் முகம் சிவந்து போயிற்று அவரது குரல் வழக்கத்திற்கு மாறாக ஓர் அச்சுறுத்தும் தொனியைப் பெற்றது பால்டிக் கடற்படையின் எதிரில் நின்று கொண்டிருந்த, உயரமான பரந்த தோற்களையுடைய கமிசார் இஸ்மாயிலோவ் திடீரென்று குறுகிப்போனவராய்த் தோற்றமளித்தார். திகைப்புற்றார். அச்சமுற்றார்''

''சட்டத்தைத் தங்கள் சொந்த விருப்பப்படி பிரயோகிப்பது'' லெனின் கூறினார். இதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. குற்றமிழைத்தவர்கள் மக்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுவர். நமது அரசு மக்கள் அரசு. சட்டத்தின் படியான ஆட்சி, நீதியை மக்கள் கோருகிறார்கள். நீங்கள் போகலாம்.''

பின்னர் என் பக்கம் திரும்பி மாறுபட்ட தொனியில், மிகவும் அழுத்தமாகவும் ஆழ்ந்த உணர்வுடனும் லெனின் சொன்னார்: ''தோழர் கொல்லந்தாய், உங்களின் பால்டிக் கடற்படை நண்பர்களை உடனடியாகச் சந்திக்க, சோவியத் ஆட்சி அராஜகத்தைச் சகிக்காது என்று அவர்களுக்குத் தெளிவாக்கிட நான் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். அவர்கள் தமது சட்டமற்ற செயல்களை நிறுத்துவது நல்லது. இதற்காக அவர்களைத் தட்டிக் கொடுக்கப் போவதில்லை. இல்லை, அராஜகத்தை நாம் சகியோம்!''

## சட்டம் பெரும்பான்மையினரின் கருத்தை வெளிப்படுத்துகிறது

சோஷலிஸப் புரட்சியின் பயனாக அரசின் சமூகத் தன்மை மாற்றமடைவதும், மெய்யான ஜனநாயகம் நிறுவப்படுவதும், அரச சட்டம், மற்

றும் ஒழுங்கின் தன்மையையும் அதை உறுதி செய்யும் முறையையும் தீவிரமாக மாற்றுகிறது வரலாற்றில் முதல் தடவையாக அரசின் முக்கிய, நிர்ணயமான செயல் கட்டாயப் படுத்தல் அல்ல, மாருக மக்களை வெகுஜன அளவில் இணங்க வைப்பது, கல்விபுகட்டுவது ஒழுங்கமைப்பது என்ருகிறது. சோவியத் பிரஜைகளில் பெரும்பான்மையினர் சட்டத்தை ஏற்றுக்கொள்வது நீதியையும் அத்தகைய சட்டத்தின் அவசியத்தையும் அவர்கள் உணர்பூர்வமாய் அங்கீகரிப்பதன் விளைவே. அதற்கு அவர்களின் உடன்பாடும் உள்ளது. சோஷலிஸ வாழ்க்கை முறையின் பணிமுழுவதும், முழு சமுதாயத்தின் நலன்களிலிருந்து தொடங்கி சட்டத்தின் சாரத்தை, அதன் அவசியத்தை அறிவுறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்வது, விளக்குவது மூலம் சட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு சிறுபான்மையோரைக் கட்டாயப்படுத்துவதன் மீது சார்ந்து நிற்கிறது.

சோவியத் யூனியனில் ஒரு சட்டம் ஏற்கப்படுவதற்கு முன், அது ஒரு நீண்ட நிகழ்வுப் போக்கின், நாடுதழுவிய விவாதத்தின் வழியே செல்கிறது. மேலும் பலவற்றில், அதன் ஏற்புக்கான முன்முயற்சி உழைக்கும் மக்களில் பரந்த பகுதிகளிடமிருந்தும் வருகிறது. உதாரணமாக, சமாதானத்தைப் பாதுகாப்பது பற்றிய சட்டம் சோவியத் சமாதானக் குழுவின் ஓர் ஆலோசனையின் பேரில் ஏற்கப்பட்டது. லெனின்கிராட் வனத்துறை இயந்திரவியல் பேரவையும் மரத் தொழில் தொழிலாளரின் விஞ்ஞான, தொழில்நுட்பக் கழகமும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவுக்குக் கூட்டாகச் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பயனுய் வனப் பாதுகாப்பு, பராமரிப்பு பற்றிய சட்டம்—முதலில் இது குறித்த நகல் நாடுதழுவிய விவாதத்திற்கு விடப்பட்டதன்பின்—ஏற்கப்பட்டது.

புதிய சட்டங்களை வரையும் சகல கட்டங்களிலும் பொது மக்கள், உற்பத்திக் கூட்டுகள், விஞ்ஞானிகள், பேரவையினர், தமது கருத்துக்களைத்

தெரிவிக்கும் ஆர்வமுள்ள தனிப்பட்ட பிரஜைகளின் கருத்துக்கள் கணக்கிலெடுக்கப்பட்டு அதன் மீது செயல்படுத்தப்படுகிறது. பத்திரிகைகள், நிர்வாக மார்க்கங்கள், கடிதங்கள், சோவியத் ஒன்றிய சுப்ரீம் சோவியத் மற்றும் ஒன்றியத்தின், சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளுடனான சந்திப்புகள், ஒருவரது வேலைத்தளக் கூட்டங்கள், பொது, சமூக ஸ்தாபனங்கள் மூலமாக, பல்வேறு வழிகளில் பொதுமக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

நாட்டின் அதியுயர்ந்த சட்டவாக்க உறுப்புக்கு - சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்துக்கு- மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருப்பவர்கள், தம்மைப் பொறுத்த மட்டில் பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதிலும், தொழிலாளர்களின் விமர்சனங்கள், ஆலோசனைகளைப் பெறுவதிலும் அக்கறை கொண்டுள்ளனர். சுப்ரீம் சோவியத் இரு சபைகளை—ஒன்றிய சோவியத், தேசிய இனங்கள் சோவியத்—கொண்டுள்ளது. இரு சபைகளுக்கும் சமவுரிமைகள் உண்டு. அவற்றின் உறுப்பினர்களுக்கு சமமான கடப்பாடு —மக்களின் சித்தத்தை வெளிப்படுத்துவது— உண்டு. சட்டவாக்க ஆலோசனைகளை ஆராயும் நிலைக் குழுக்கள் ஒவ்வொரு சபையாலும், உறுப்பினர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இக் குழுக்கள், திணைக்கள நிலைக்குழுக்களோடு, சுப்ரீம் சோவியத்தின் அடுத்த கூட்டத்தின் விவாதத்திற்காக, ஒவ்வொரு புதிய சட்டத்தின் நகலையும் வரைவதில் பணிபுரிகின்றன.

பல சட்டங்கள் சுப்ரீம் சோவியத்தால் ஒருமனதாக ஏற்கப்படுகின்றன, ஊர்ஜிதம் செய்யப்படுகின்றன என்ற உண்மை ஜனநாயகம் இல்லாததையே காட்டுகிறது என்று மேலைநாட்டின் எமது எதிரிகள் அடிக்கடி குற்றஞ்சாட்டுகின்றனர்; இந்த உறுப்புக்கு அதிகாரமேயில்லை என்பதற்கு இது சான்றாகும் என்றும் அடித்துக் கூறுகின்றனர். எனினும் வாக்களிப்பதில் உறுப்பினர்களின் இத்தகைய ஒருமைப்பாட்டுக்கு முன்னர் வெகுஜன

கருத்து ஆய்வும், அரசு, பொது ஸ்தாபனங்களுடன் ஆலோசனையும் செய்யப்படுகின்றன; ஒவ்வொரு நகல் சட்டத்தின் வாசகமும் சுப்ரீம் சோவியத்தின் நிலைக்குழுக்களில் விவாதிக்கப்படுகிறது: இதை சோவியத் அமைப்பைக் குறைகூறுவோர் எப்படியோ புறக்கணிக்கின்றனர்.

சோவியத் மனிதன் அரசிலிருந்து தன்னை அப்பாற்படுத்திக் கொள்வதில்லை; அரசின் நலன்களையும் பொது நலன்களையும் தனது சொந்த ஜீவாதார நலன்களாகக் கருதுகிறான். இயல்பாகவே, இத்தகைய நலன்களின் ஒற்றுமை உடனடியாக ஏற்பட்டுவிடவில்லை. தூக்கி வீசப்பட்ட பழைய சுரண்டல்முறை, ஏராளமான மக்களிடம் அரசு சம்பந்தப்பட்ட எதையும் அவநம்பிக்கை கொள்ளும் மரபை விட்டுச் சென்றிருந்தது. ''இதை கடப்பது மிகவும் கஷ்டமானது இதை ஒரு சோவியத் அரசுதான் செய்யமுடியும்.'' என்று லெனின் எச்சரித்தார். ''ஆயினும் ஒரு சோவியத் அரசுக்கு இதைச் செய்வதற்கு பெருமளவு நேரமும் அளப்பரிய விடாமுயற்சியும் தேவைப்படும்!''(1)

சோவியத் ஆட்சி இக் கடமையில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கு மிகவும் முனைப்பான, அண்மிய சான்று, 1977ல் சோவியத் ஒன்றியத்தின் புதிய அரசியல் யாப்பு குறித்து முன்னென்றும் கண்டிராத, வெகுஜன, மெய்யாகவே நாடுதழுவிய விவாதமாகும்.

## நாடு தழுவிய விவாதமுறை

### ஆரம்ப சோதனைகளிலிருந்து பாரம்பர்யத்துக்கு

முக்கியமான நகல் சட்டங்களை மக்களின் விவாதத்திற்கு விடும் நடைமுறை உடனடியாக ஏற்பட்டுவிடவில்லை. சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் அச்சமயத்திலிருந்த குறிப்பிட்ட நிலைமை காரணமாக அது பயன்படுத்தப்படவில்லை.

---

1 வி.இ. லெனின், தொகுப்பு நூல்கள். தொகுதி 27- ப. 253

ஆயினும், அப்போதும்கூட மிகவும் முக்கியமான சட்ட இனங்களை ஏற்பதில் ஏதாவது ஒரளவில் பங்கெடுத்துக்கொண்ட தொழிலாளர்களின் பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நகல் சட்டங்கள் நாடளாவிய விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டஆரம்ப சந்தர்ப்பங்கள், 1926ல் திருமணம், குடும்பம், பாதுகாவலர் பொறுப்பு பற்றிய உத்தேச சட்டம். ருஷ்ய சமஷ்டி சம்பந்தப்பட்ட சட்டம், 1927ல் நிலப் பயன்பாடு, குடிவாரம் பற்றிய நகல் பொதுக் கோட்பாடுகள் சம்பந்தமானது. இன்று உத்தேச சட்டத்தை மக்களின் விவாதத்திற்கு விடுவது நிலையான மரபாகிவிட்டது, இதன் முக்கியத்துவம் பல ஆண்டுகளினது அனுபவத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

1977ல் தனது அறுபதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடிய உலகின் முதலாவது தொழிலாளர் அரசு, ஒரு சிக்கலான வளர்ச்சிப் பாதையில் பயணித்தது; பல இடர்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. நாட்டின் சமூக சாதனைகள் யாவும் அடுத்தடுத்த அதனுடைய அரசியல் யாப்புகளில் பிரதிபலித்துள்ளன; இவ்வாறு அது ஒவ்வொன்றும் மற்றொரு படி முன்செல்வதைக் குறிப்பிட்டன.

1936ம் ஆண்டு அரசியல் யாப்பு ஏற்கப்பட்ட போது, நாடு அப்போதுதான் சோஷலிஸத்தின் அடித்தளங்களைக் கட்டும் வேலையைப் பூர்த்திசெய்திருந்தது. கூட்டுப்பண்ணை அமைப்பு அதன் குழவிப் பருவத்தில் இருந்தது. இன்னும் உறுதியாக நிலை நிறுத்தப்படவில்லை. தொழில் நுட்பரீதியில்தேசியப்பொருளாதாரம் பல அம்சங்களில் தொழில் வளர்ச்சியடைந்த பெரும்பாலான நாடுகளைவிட பின் தங்கியிருந்தது. புரட்சிக்கு முந்திய காலங்களின் பிதுரார்ஜிதம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

சோவியத் யூனியன் தற்போது ஒரு வளர்ச்சியுற்ற முதிர்ச்சியடைந்த சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்பியுள்ளது. மாபெரும் கோட்பாட்டு ரீதியான மாற்றங்கள் சமுதாய வாழ்வின்

சகல அம்சங்களையும் பாதிக்கின்றன. சோஷலிஸ உடைமையின் அடிப்படையிலான நாட்டின் பொருளாதாரம் அடையாளம் காணமுடியாதவாறு மாறிவிட்டுள்ளது. தனியொரு தேசிய பொருளாதார அமைப்பு நிர்மாணிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுகிறது. சோவியத் சமுதாயத்தின் சமூக இயல்புக்கு ஒரு புதிய பரிமாணம் சேர்க்கப்பட்டுள்ளது.

இன்றைய தொழிலாளி வர்க்கத்தில் கோடிக் கணக்கான கல்வி பெற்ற, தொழில்நுட்பரீதியில் தகுதிபெற்ற, அரசியல் ரீதியில் முதிர்ச்சியுற்ற மக்கள் உள்ளனர். சமுதாய வாழ்விலும் அரசை நிர்வகிப்பதிலும் அவர்களின் செயலூக்கமான பங்கேற்பு குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. கிராமத்திலுள்ள தொழிலாளியின் மனோவியல் அவனுடைய உழைப்பின் தன்மை, கல்வி மட்டம் மற்றும் வாழ்க்கை முறையுடன் சேர்ந்து மாறியுள்ளது; இன்றியமையாதவாறு நகரிலுள்ளதைப் போல் ஆகியுள்ளது. தற்போது ஒரு சோஷலிஸ அறிவுத்துறையினர், மெய்யிலேயே மக்கள் அறிவுத் துறையினர் ஏற்பட்டுள்ளனர், சமுதாயத்தில் அவர் தம் செல்வாக்கு அதிகரிக்கிறது. சமுதாயமே சமூக ரீதியில் ஓரினத்தன்மை வாய்ந்ததாகி வருகிறது. ஒரு புதிய சமூகக் கூட்டமைப்பு—சோவியத் மக்கள்—தோன்றியுள்ளது.

அரசியல் சமத்துவத்தோடுகூட சோவியத் யூனியனில் அடங்கியுள்ள தேசங்களும் தேசிய இனங்களும் பொருளாதார, கலாசார, சமூக சமத்துவத்தையும் அனுபவிக்கின்றன. இன்று எந்த அம்சத்திலாவது பின்தங்கியுள்ள எந்த மக்களினமும் அங்கில்லை. எல்லா ஒன்றியக் குடியரசுகளும் சகல துறைகளிலும் ஓர் உயர்ந்த வளர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளன. கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு சட்ட, அரசியல் யாப்புரீதியான அங்கீகாரம் கிடைக்க வேண்டியது இயற்கையே,

புதிய அரசியல் யாப்பின் நகல் 1977 ஜூன் 4ல் நாட்டின் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது; இது நான்கு மாதகாலம் மக்களால் விவாதிக்கப் பட்டது. சுமார் 14 கோடி பிரஜைகள்—நாட்டின் வயது வந்த மக்களில் 80 சதவீதத்திற்கு அதிகமானோர்—இந்த விவாத நிகழ்வுப் போக்கில் பங்கு கொண்டனர். அரசியல் யாப்பு ஆணைக்குழுவுக்கு சுமார் 400000 ஆலோசனைகள் கிடைத்தன. இதன் பயனாக 173 விதிகளில் 110விதிகளுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. ஒருபுதிய விதியும்சேர்க்கப்பட்டது. எனவே ஆணைக்குழுவின் தலைவரும்சோ.க.க. மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளரும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் தலைவருமான லியோனிட் பிரெஷ்னேவ், உயர்ந்த சட்டவாக்க அமைப்பாகிய சுப்ரீம் சோவியத்தில்—இது புதிய அரசியல் யாப்பை ஏற்றது—ஆற்றிய தனது உரையில். ''...அனைத்து சோவியத் மக்களும்தான் உண்மையில் தமது அரசின் அடிப்படைச் சட்டத்தின் உண்மையான படைப்பாளிகள் ஆகியுள்ளனர்,'' என்று நியாயமாகவே குறிப்பிட்டார்''.

பெரும் பாலான யோசனைகளும் கருத்துகளும் பெரும் துல்லிதம் மற்றும் தெளிவை நோக்கமாகக் கொண்டிருந்தன: அனுபந்தத் தன்மையினதாய் இருந்தன அல்லது வாசகத்தில் திருத்தங்கள் செய்யும் வடிவத்தை எடுத்தன விவாதத்திலிருந்த அடிப்படைச் சட்ட நகலை மேம்படுத்த செழுமைப் படுத்த, கூடுதலாகச் சேர்க்க மக்கள் விரும்பினர். ஒவ்வொரு ஆலோசனையும் தகுதி வாய்ந்த அமைப்புகளால் பரிசீலிக்கப்பட்டது. பகுப்பாய்வு செய்யப்பட்டது. எல்லாப் பிரேரணைகளின் மூலவர்களுக்கும் பதில்கள் அனுப்பப்பட்டன.

நாட்டின் முன்னணிப் பத்திரிகையான பிராவ்தாவுக்கு ஏராளமான கடிதங்கள் வந்தன 1977 ஜூன் 6க்கும் அக்டோபர் 3க்கும் இடையில் ஆசிரியர்க் குழு 30,510 கடிதங்களைப் பெற்றது. கூட்டுப் பண்ணை விவசாயிகள், விஞ்ஞானிகள், இயந்திரவியலாளர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், மாணவர்கள், பள்ளிப் பிள்ளைகள்,

ஆயுதப் படைவீரர்கள், ஓய்வுபெற்றவர்கள், குடும்பத் தலைவிகள் ஆகியோரிடமிருந்து இவை வந்தன. ''சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பு பற்றிய விவாதம்'' என்று குறிக்கப்பட்ட கடிதங்களில் பிரதிநிதித்துவம் பெறுத ஒரு நகரம், பிராந்தியம், அல்லது ஒன்றியக் குடியரசு அல்லது சுயாட்சிக் குடியரசு ஒன்று கூட இல்லை. பிராவ்தா இத்தகைய 1246 கடிதங்களைப் பிரசுரித்தது.

ஒவ்வொரு பத்து நாட்களுக்கு ஒரு தடவை அரசியல் யாப்புக் குழுவுக்கு, அதற்குக்கிடைத்த ஆலோசனைகள் பற்றிய விரிவான அறிக்கையை பிராவ்தா சமர்ப்பித்தது. அதோடு நான்கு மாத கால நாடளாவிய விவாதத்தில் நகல் அரசியல் யாப்பின் பல்வேறு விதிகள், பிரிவுகள் மீதான மக்களின் கருத்துக்கள், விமர்சனங்களையும், விவாதத்தின் போது எழுந்த விஷயங்களைப் பற்றியும் 31 தொகுப்புக்கள் தயாரிக்கப்பட்டு அரசு, கட்சிக் குழுக்கள், சோவியத்துக்களின் குழுக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

விவாதத்தில்எழுப்பப்பட்ட விஷயங்களில் பின்வருவன போன்றவையும் இருந்தன. சொந்த சொத்து; மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களும் அவற்றுக்கான தேர்தல் முறையும்; ஓய்வு பெற்றோரின் நல்வாழ்வு பற்றிய ஆலோசனைகள்; துரைத்தனப் போக்கு; மோசமான நிர்வாகமும் அரசு சொத்து சம்பந்தமான விரயமும்; தொழிற்சாலையில் கூட்டு மற்றும் நிர்வாகத்தின் பாத்திரம்; உழைப்பின் உற்பத்தியாற்றலை உயர்த்தும் பிரச்னை.

நகல் அடிப்படைச் சட்டம் மீதான நாடளாவிய விவாதம் முழுமையும் அதிலுள்ள ஒவ்வொரு எழுத்து சம்பந்தமாகவும் நாடுதழுவிய உடன்பாடு இருந்தது என்பதை அர்த்தப்படுத்தவில்லை. சோவியத் பிரஜைகள் ஒரு பொதுவான பொருள்முதல்வாத விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்ற உண்மையானது சோவியத் விரோதப் பிரசாரம் வலியுறுத்த விரும்புவது போல் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக,

வாழ்வு சம்பந்தமான சகல பிரச்னைகளிலும் ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டுள்ள விசுவாசிகள் என்று எவ்விதத்திலும் குறிப்பிடுவதாகாது. மாறாக மக்கள் தமது சுயேட்சையான மதிப்பீடு மற்றும் அபிப்பிராயத்தால் அவர்களின் சொந்த மூளையைப் பாவிக்கும் நிர்ணயத்தால் குணும்சப்படுத்தப்படுகின்றனர். இது அவர்கள் தவறு செய்யவும் தன் மனப்போக்குடையவர்களாக இருக்கவும். வெகுவிரைவில் முன்செல்ல விரும்புவதும் சாத்தியமே என்பதையும் பொருள் படுத்துகிறது இவை அனைத்தும் இயற்கையானதே. அதனால்தான் நகல் அரசியல் யாப்பு விவாதத்தின் போது ஒரு குறிப்பிட்ட பிரச்னை மீது பத்திரிகைகளில் அடிக்கடி, அக்கம் பக்கமாக மாறுபட்ட கருத்துக்களும் சில சமயங்களில் முரணான கருத்துக்களும் கூட வெளியாகின.

உதாரணமாக ஒடெதஸ்ஸாவில்வசிக்கும்ஒ. குத்ஸி என்ற பொருத்துனர் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சமவுரிமைகளைக் குறிப்பிடும் ஒரு விதியை நகலிலிருந்து நீக்கிவிட வேண்டுமெனக் கருதினார்; ஏனெனில், அத்தகைய சமத்துவம் ஏற்கனவே அடையப்பட்டுவிட்டது என்றும், இச்சமத்துவக் கோட்பாடு மற்றொரு விதியில் பொதுவான வடிவத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கருதினார். எனினும் பல வாசகர்கள் இக் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அத்தகையவர்களில் கிர்க்கிஸிய பெண் புடவைத் தொழிலாளியான கே. அய்தரோவா, சம்பந்தப்பட்ட விதியை நீக்குவதென்பது சமுதாயத்தில் மாதர்கள் பற்றிய பிரச்னையின் விசேட முக்கியத்துவத்தைக் குறைப்பதாகிவிடும் என்று எழுதினார். முதலாளித்துவ சமுதாயத்தில் மாதர்கள் அனுபவிக்கும் பாரபட்சத்தின் பின்னணியில் இப் பிரச்னைக்கு ஒரு முக்கிய சர்வதேச முக்கியத்துவம் உண்டு என குறிப்பிட்டார். ஏற்றுக் கொள்ள முடியாத ஆலோசனைகளும் இருக்கவே செய்தன என்பதும் உண்மையே. கேள்விக்குரியவற்றோடு அனுமதிக்க முடியாதவை என்று அரசியல்யாப்பு ஆணைக்குழு கருதியவையும் இருந்

தன. உதாரணமாக, ஒன்றியக் குடியரசு சுயாட்சிக் குடியரசுகளை நீக்கிவிட்டு தனியொரு சோவியத் கருத்தமைப்பை அறிமுகஞ் செய்ய வேண்டும், அல்லது அவற்றின் அரசுரிமையைக் கட்டுப்படுத்த வேண்டும், சுப்ரீம் சோவியத்தின் இரு சபைகளில் ஒன்றுகிய தேசிய இணங்கள் சோவியத்தை ஒழித்து விடலாம் என்றும் சில பிரஜைககள் ஆலோசனை தெரிவித்தனர். அத்தகைய ஆலோசனைகளின் தவமுன தன்மையைச் சுட்டிக் காட்டிய லியோனிட் பிரெஷ்னேவ், நாட்டில் உள்ள தேசங்கள் ஒன்றுக நெருங்கிவரும் ஸ்தூலமான போக்கை ஒருவர் செயற்கையாகக் கட்டாயப்படுத்த முடியாது; ஏனெனில் சோவியத் மக்களின் சமூக, அரசியல் ஒற்றுமை தேசியத் தனித் தன்மைகள் மறைவதை சிறிதும் குறிப்பிடவில்லை என்றுர்.

நாடு தழுவிய விவாதம் மிகமுக்கியமான விஷயத்தை—உத்தேச புதிய அரசியல் யாப்பிற்கு மக்களின் அங்கிகாரத்தை, ஆதரவை, அது தினசரி வாழ்வுக்கும் சமுதாயத்தின் மேலும் வளர்ச்சிக்கும் ஒரு சிறந்த அடிப்படையை நல்குகிறது என்ற உண்மையை வெளிக் கொணர்ந்தது. இதில்தான், நகல் அரசியல் யாப்பை மக்கள் பரிசீலித்ததன் முக்கிய அரசியல் பயன் உள்ளது.

1977 அக்டோபர் 7ல் மாபெரும் கிரெம்ளின் மாளிகையில் சுப்ரீம் சோவியத்தின் 7வது (விசேடக்) கூட்டத் தொடரின் இறுதி அமர்வு நடைபெற்றது. இதில் இரு சபைகளின் உறுப்பினர்களோடு சர்வ தேசக் கம்யூனிஸ்ட், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முன்னணிப் பிரமுகர்கள், மாஸ்கோவிலுள்ள வெளிநாட்டுத் தூதரகத் தலைவர்கள், பிரபல வெகுஜனப் பிரமுகர்கள், சோவியத், அயல் நாட்டு நிருபர்களும் குழுமியிருந்தனர். அரசியல் யாப்புக், குழுவின் தலைவர் என்ற முறையில் பேசிய லியோனிட் பிரெஷ்னேவ், நாடுதழுவிய விவாதமானது, பல பயனுள்ள ஷரத்துக்களைச் சேர்ப்பது, அதற்குக் கூடுதல் துல்லிதத்தைக் கொடுப்பது மூலமும் வாசகத்திற்குத் திருத்தங்களைச் செய்வது மூலமும் புதிய அரசியல் யாப்பு நகலைப் பெருமளவுக்கு மேம்படுத்து

வதைச் சாத்திய மாக்கியுள்ளது, என்ருர். பெறப் பட்ட ஆலோசனைகள், கருத்துக்களைப் பற்றிக் குறிப் பிடுகையில் அவர் சொன்னுர்: ''இத்தகைய அறிக் கைகள், கடிதங்களைப் பார்க்கும் போது அவை சோஷலிஸத்தினுடைய சாதனையின்—அரசினின்றும் தன்னைப் பிரிக்காத அரசினதும் அனைத்து மக்களின தும் நலன்களைத் தனது சொந்த ஜீவாதார அக்க றையாகக் கருதுகின்ற புதிய மனிதன் தோன்றி யுள்ளதின் பிரதிபலிப்பே என்ற முடிவுக்கே ஒருவர் வரமுடிகிறது.''

நான்கு நாட்கள் நடைபெற்ற அக் கூட்டத் தொடரில் 92 உறுப்பினர்கள் பேசினர்; அவர்களில் பலர் தமது ஆலோசனைகளை எழுத்து வடிவத்தில் சமர்ப்பித்தனர். அரசியல் யாப்பின் இறுதி வாசகம் கூறப்பட்ட பெரும்பாலான யோசனைகளைக் கணக் கில் எடுத்தது. நாடாளுமன்ற உறுப்பினர் வி. போஸ்த்னிகோவ், மாஸ்கோ பெரும்பாகப் பிராந் தியத்தின் ஓர் உருக்குத் தொழிலாளி, ஒரு பிரஜை தனிப்பட்ட முறையில் சொந்தமாகக் கொள்ளக் கூடிய சொத்து வகைகளை வகுத்துக் கூறுவதுடன் அரசியல் யாப்பு நின்று விடக் கூடாது, ஆனுல், சொந்த சொத்தின் அடிப்படை, பிரஜைகள் தமது சொந்த உழைப்பினுல் பெறப்பட்ட வருமானமே என்பதை வலியுறுத்த வேண்டும் என்று கருதினுர்.

உறுப்பினர்கள் வி. மீயூனுர்கியா—ஜோர்ஜியா வைச் சேர்ந்த விவசாய இயந்திர இயக்குநர், ஐ. புரோகோபியேவ்—லெனின்கிராடைச் சேர்ந்த உருக்கு ஆலை இயக்குநர்—இருவரும், சோவியத் அரசு புதுமை புனைவதையும், உழைப்புக்கு ஆக்க பூர்வ மனுேபாவத்தையும் ஊக்குவிக்கிறது; தேசப் பொருளாதாரத்தில் கண்டுபிடிப்புகளையும் சிக்கனச் சீரமைப்பு ஆலோசனைகளையும் அறிமுகஞ் செய்வதை ஒழுங்கு செய்கிறது என்பதை வரையறுத்துக் கூறு வதை வாசகத்தில் கூடுதலாக சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

உறுப்பினர்கள் வாலெந்தினு நிகொலயேவா தெரஸ்கோவாவும் சோவியத் மாதர் கமிட்டியின் தலைவி-செ. புகோவாவும்—இவானோவா புடவைத் தொழிற்சாலை இயக்குநர்-ஒரு முக்கிய விஷயத்தை எழுப்பினர். சிறிய குழந்தைகளையுடைய தாய் மாருக்கு வேலை நேரத்தைப் படிப்படியாகக் குறைக்க அரசு முயலும் என்று சுட்டிக்காட்டும் விதத்தில் விதி 35க்கு ஒரு சேர்ப்பை அவர்கள் முன்வைத்தனர். இந்த அம்சமும் அரசியல் யாப் பின் இறுதி வாசகத்தில் சேர்க்கப்பட்டது. குழந் தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பின்ன ணியில் குழந்தை உழைப்பைத் தடைசெய்யும் விதியைக் கூடுதல் துல்லிதமாக்குவது பற்றிய போல்தாவா பிராந்தியத்தின் ஒரு விடுதிப் பள்ளி இயக்குநராகிய உறுப்பினர் எம். ஆந்ரியேவ்ஸ்கியின் யோசனையையும் வரைவுக்குழு ஏற்றுக்கொண்டது. இந்த ஷரத்து எவ்வகையிலும் பள்ளியிலான வேலைப் பயிற்சி, கல்விக்குப் பொருத்தப்படமாட் டாது; இது சமுதாயத்தின் மிகமுக்கியக் கடமை களில் ஒன்ருக இருந்து வருகிறது என்பதை உறுதிப் படுத்த அவர் விரும்பினுர்.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 60ஆம் ஆண்டு விழா கொண்டாட்டங்களின் தருணத்தில் புதிய அரசியல் யாப்பு ஏற்கப்பட்டது. இந்த இரு நிகழ்வுகளுக்கும் இடையே ஆழ்ந்த தொடர்பு உள்ளது: ஏனெனில், புதிய அடிப்படைச் சட்டம் சோவியத் அரசின் வளர்ச்சிப் பாதை முழுவதன் பயனை செறிவான வடிவத்தில் பிரதிபலிக்கிறது. அது அடையப்பெற்றுள்ள வெற்றிகளை வலுப்படுத் துகிறது; ஒவ்வொரு நபருக்கும் பந்தோபஸ்து உணர்வை அளிக்கும் உரிமைகள், சுதந்திரங்களைப் பிரஜைகளுக்கு உத்தரவாதம் செய்கிறது: அவர் தனது ஆக்க நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கி, உற்பத்தி நிர்வாகத்திலும் சமுதாய விவகாரங்களி லும் நேரடிப் பங்கெடுப்பதைச் சாத்தியமாக்கு கிறது. புதிய அரசியல் யாப்பை வரைவதிலான நிகழ்வுப் போக்கு முழுவதும், சோவியத் மனிதன் தனது நாட்டின் எஜமானன், சோவியத் சமுதா

யம் மற்றும் அரசின் வாழ்வை ஆளும் சட்டங்களை உருவாக்குபவன் என்ற உண்மையை மீண்டும் ஒருமுறை கோடிட்டுக் காட்டியது.

## பொது விவாதம் பற்றிய ஏற்பாடு

1960ம் ஆண்டுகளில் சோவியத் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கிய வழக்கறிஞர்களின் கட்டுரைகளும் வாசகர்களின் கடிதங்களும் திருமணம், குடும்பம் சம்பந்தமான சட்டத்தின் செயற்பாட்டில் குறைபாடுகள் உள்ளன என்று கருத்து தெரிவித்து அது திருத்தப்படவேண்டும் என்று கோரின. அந்தச் சட்டம் ஏற்கப்பட்டதன் பின்னர், தேசியப் பொருளாதாரம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது, பெரும் சமூக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன, பொருளாயதரீதியில் மக்கள் மேம்பாடடைந்துள்ளனர், வாழ்க்கைத் தரமும் கல்வித் தரமும் உயர்ந்துள்ளன, மக்களின் கலாசார வளர்ச்சி மட்டமும் உயர்ந்துள்ளது, மக்களின் புதியதொரு தலைமுறை வளர்ந்துள்ளது என்று இக் கட்டுரைகள், கடிதங்களை எழுதியோர் சுட்டிக்காட்டினர். இம்மாற்றங்கள், 1917ல் பிரகடனம் செய்யப்பட்ட திருமணம், குடும்பம் சம்பந்தமான சோவியத் ஆட்சியினது ஆணையின் அடிப்படையாக உள்ள கோட்பாடுகளை—சுதந்திரமான, சுயவிருப்ப திருமணம், சகல குடும்ப விஷயங்களிலும், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பூரண சமத்துவம், திருமண பந்தத்திற்கு வெளியில் பெறப்பட்ட குழந்தைகள் உள்ளிட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் அரசு பாதுகாப்பு—பாதிக்கவில்லை.

திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய சட்டப் பிரச்னை பொதுமக்களிடையே விரிவான ஆர்வத்தைத் தூண்டியது. பத்திரிகையில் நடைபெற்ற விவாதம் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் கவனத்தை ஈர்த்தது; அது இது குறித்த சட்டப் பிரேரணைகளுக்காக சம்பந்தப்பட்ட குழுக்களிடமிருந்து அறிக்கையைக் கோரியது. திருமணம், குடும்பம் சம்பந்தமாக ஒரு

புதிய சட்டத்தை வரைய தீர்மானிக்கப்பட்டது. இதற்காக குழு அமைக்கப்பட்டது.

1963ன் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்ட புதிய சட்டத்தின் நகல், நாட்டின் பல்கலைக்கழகங்களது பீடங்களுக்கும், சட்ட ஆராய்ச்சிக் கழகங்களுக்கும், பல்வேறு குடியரசுகளின் அரசு மற்றும் அரசு சார் பற்ற ஸ்தாபனங்களுக்கும்கருத்து தெரிவிப்பதற்காக அனுப்பபப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தினது இருசபைகளின் சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, விஞ்ஞானம், கலாசாரம் சம்பந்தமான நிலைக் குழுக்களாலும் அது பரிசீலிக்கப்பட்டது.

நகல் மீதான பணி பல ஆண்டுகள் நடைபெற்றது. 1968 இளவேனிற் காலத்தில், இஸ்வெஸ்தியாவும் அனைத்து யூனியன் குடியரசுகளின் தேசியப் பத்திரிகைகளும் திருமணம், குடும்பம் பற்றிய அடிப்படைச் சட்டத்தை வெளியிட்டன. இந்நகரில் பணியாற்றிய சுப்ரீம் சோவியத் குழுக்கள் 7,000க்கு மேற்பட்ட கருத்துக்கள், ஆலோசனைகளைப் பெற்றன; இஸ்வெஸ்தியாவுக்கு அதன் வாசகர்களிடமிருந்து 8,000க்கு மேற்பட்ட கடிதங்கள் வந்தன. இஸ்வெஸ்தியா, லித்தெரதுர்னயா காஸியத்தா மற்றும் குடியரசு, பிராந்திய பத்திரிகைகள் முறையாக பிரஜைகளிடமிருந்து கட்டுரைகள், கடிதங்கள், தொகுக்கப்பட்ட விமர்சனங்கள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வெளியிட்டன. மாஸ்கோ, லெனின் கிராட், கீவ், மின்ஸ்க், அல்மா—அடா, திபிலிசி, பாகு, வில்னியஸ், கிசினெவ் மற்றும் பிற நகரங்களின் தொழில் நிறுவனங்களில் நகலைப் பற்றிய விவாதத்தோடு சுவையான வாதங்களும் நடைபெற்றன. பல அமைச்சுக்கள், அரசுத் திணைக்களங்கள், விஞ்ஞானத் தொழிலாளர்கள், கலை, இலக்கியப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்களால் அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டு, ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட திருத்தத்தின் இறுதி வடிவத்தின் ஆரம்பகர்த்தா யார் என்று நிர்ணயிப்பது

அடிக்கடி கஷ்டமானதாக இருக்கலாம்; ஏனெனில், வாசகமானது பல திருத்தங்கள், நயப்படுத்தல்களுக்கு உள்ளாகிருக்கும்' ஆனால், இது முக்கியமானதல்ல. நகல் சட்டத்தைச் சீரமைப்பதற்கு உதவிய ஒவ்வொரு ஆலோசனை, கருத்து அல்லது சொற்றொடரில் தான் மெய்யான மதிப்பு அடங்கியிருந்தது. முக்கியமானதென்னவெனில், சட்டம் மக்களால் உருவாக்கப்பட்டது, அவர்கள் அனைவரின் ஆதரவும் அதற்கு உண்டு என்பதே.

திருமணம், குடும்பம் பற்றிய அடிப்படைச் சட்டம் அதன் சகல திருத்தங்கள் சேர்ப்புகளுடன் 1968 ஜூனில்சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம்சோவியத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அது யூனியன் குடியரசுகள் திருமணம். குடும்பம் மீதான முறையே தமது சட்டங்களைத் திருத்துவதற்கு அடிப்படையாகப் பயன்பட்டது.

புதிய நிலச் சட்டம் பற்றிய விவாதத்தின் போது (1968-ல்) சுப்ரீம் சோவியத் சுமார் 3,000 ஆலோசனைகள், கருத்துக்களைக் கொண்ட கடிதங்களைப் பெற்றது. அவற்றின் அடிப்படையில் மூன்று புதிய விதிகள் நகலில் சேர்க்கப்பட்டன, ஒன்று அரசுப் பண்ணைகள்,பிற விவசாய நிறுவனங்கள், ஸ்தாபனங்களிலுள்ள தொழிலாளர்களின் சொந்தத் துண்டு நிலங்கள் சம்பந்தமானது. மற்றொன்று ஓய்வு,ஆரோக்கிய விடுதிகளுக்கான நிலம் பற்றியது. மூன்றாவது இயற்கைக் காப்பிடங்களை நிறுவுவது பற்றியது. நிலப்பாவனை பிரச்னைகளைத் தீர்மானிப்பதில்—கட்டட, நகர அபிவிருத்திப் பணிக்கு அளிப்பதில்—முடிவுசெய்வதில் ஸ்தல சோவியத்துக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்,நிலச் சட்டத்தை மீறுவோருக்குக் கூடுதல் தண்டனை வழங்கப்பட வேண்டும், நிலத்தைப் பயன்படுத்துபவர்களின் உரிமைகள், கடப்பாடுகளை வரையறுப்பதில் சட்ட வாசகம் மேலும் திட்டவட்டமாக இருக்கவேண்டும், தேசியப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கு நிலம்ஒதுக்கும் முறையை மேம்படுத்த வேண்டும் என்று வந்த யோசனைகளும்

கவனத்திற்கு எடுக்கப்பட்டன. அவையனைத்தும், நாட்டின் விவசாய உற்பத்தி முழுமையின் அடிப்படையாக—நாட்டின் சொத்தாகிய—நிலத்தைக் கவனமாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் சட்டத்தைச் செயல்படுத்துவதைச் சாத்தியப்படுத்தின.

1976 ல் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாசார நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது, பயன்படுத்துவது சம்பந்தமான ஒரு புதிய சட்டத்தை ஏற்றது. இந்த நகல் சட்டம் இஸ்வெஸ்தியா, சோவியத்ஸ்காயா குல்தூரா ஆகிய தேசியப் பத்திரிகைகளிலும் யூனியன் சுயாட்சிக் குடியரசுகளின் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. கல்வி, விஞ்ஞானம் கலாசாரத்திற்கான சுப்ரீம் சோவியத் குழுவுக்கு கழகங்கள், ஸ்தாபனங்களின் உழைப்புக் கூட்டுக்கள், படைப்பகாகக்கலைச் சங்கங்கள், வரலாற்று நினைவுச்சின்னங்களைப் பாதுகாப்பதற்கான சங்கங்கள் மற்றும் பிரஜைகளிடமிருந்து 1600 ஆலோசனைகள் வந்தன. இதன் பயனாய் பல முக்கிய ஷரத்துக்கள் நகலில் சேர்க்கப்பட்டன,

விரிவான வெகுஜன விவாதத்திற்குப்பின் ஏற்கப்பட்ட சமீபத்திய சட்டங்களின் பிற உதாரணங்கள் உடல் நலப்பாதுகாப்புச் சட்டம் (1969), நாட்டின் நீர் வளங்கள் பற்றிய சட்டம் (1970), பிரதிநிதிகளின் அந்தஸ்து பற்றிய சட்டம் (1972), கல்வி பற்றிய அடிப்படைச் சட்டம் (1973), கனிவளங்கள் பற்றிய சட்டம் (1975) ஆகியனவாகும்

## சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களும் அங்கக் குடியரசுகளின் சட்டங்களும்

சோவியத் ஒன்றியம் அரசுரிமை படைத்த ஒன்றியக் குடியரசுகளது சோஷலிஸ சமஷ்டிக் கோட்பாட்டின் மீது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு பலதேசிய இன அரசாகும்; ஒன்றியக் குடியரசுகள் பதினைந்து ஆகும்; இவற்றில் இருபது சுயாட்சிக் குடியரசுகளும் அடங்கியுள்ளன.

## எல்லை வரம்பு

ஒரு சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் ஒன்றியம் அமைக்கப்படுவதற்கான ஒப்பந்தமும் அதன் உருவாக்கம் பற்றிய பிரகடனமும் சோவியத் சோஷலிஸக் குடியரசுகளது ஒன்றியத்தின் சோவியத்துகளது முதலாவது காங்கிரஸில் 1922, டிசம்பர் 30 ல் ஏற்கப்பட்டன. அன்று முதல் சோவியத் சட்டம் ஒரு சமஷ்டி அரசின் சட்டமாக, அதாவது ஒன்றிய சுயாட்சிக் குடியரசுகளின் சட்டங்கள் சோவியத் ஒன்றியம் முழுவதன் சட்டங்களுடன் ஒன்றிணையும் ஓர் அமைப்பாக வளர்ச்சியுற்றுள்ளன. புதிய அரசியல் யாப்பு அதற்கு முந்தியவற்றைப் போன்றே, சோவியத் ஒன்றியத்தின் வரம்புக்குள் வரும் விசயங்கள், சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் கூட்டு அதிகாரத்திற்குள் வருகின்ற விஷயங்கள், ஒன்றியக் குடியரசுகளுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றைத் தெளிவாக முன்வைத்துள்ளது. அது சோவியத் ஒன்றிய சட்டத்தின் உயர் அதிகாரத் தன்மையையும் ஒன்றியக் குடியரசுகளின் அரசியல் யாப்புகள் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்புக்கு இசைவானதாகவும் குடியரசுகளின் சட்டங்கள் சோவியத் ஒன்றியத்தின் சட்டத்திற்கு இசைவானதாகவும் இருக்கவேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்ட சோவியத் சட்டவமைப்புமுழுமையின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. சோவியத் அரசியல் யாப்பு சோவியத் சட்ட உறுப்பு முழுவதும் அரசு அதிகாரத்தைச் சுயமாக செயல்படுத்துவதற்கும், அரசு, பொருளாதாரம் சம்பந்தமாக சகல துறை நடவடிக்கைகள் கலாசார விஷயங்களில் முன்முயற்சியைக் காட்டுவதற்கும் ஒன்றியக் குடியரசுகளுக்கு விரிவான வாய்ப்பை அளிக்கின்றன. இது சம்பந்தமாகக் குடியரசுகளுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகள் அவற்றின் சொந்தச் சட்டங்கள் மூலமாகக் கைவரப் பெறுகின்றன, அவற்றின் நோக்கம், விசேஷ தேசிய ஸ்தல நிலைமைகளைக் கணக்கிலெடுத்து சோவியத் சட்டங்களை மேலும் விளக்கு

வதும் ஒரு குறிப்பிட்ட குடியரசின் அதிகார வரம்பிற்கு முற்றிலும் உட்பட்ட விஷயங்களை முடிவு செய்வதுமாகும்.

ஒன்றியக் குடியரசுகளின் சட்டம் இயற்றும் உரிமை சோவியத் ஒன்றியத்தின் சட்டத்தில் விசேஷமாகக் குறிப்பிடப்படாத விரிவான பிரச்னைகளைத் தழுவியுள்ளது. உதாரணமாக குற்றவியல் சட்டத்துறையில் ஒருகுற்றச் செயலென்றால் என்ன, அதற்கு எவ் வகைப்பட்ட தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதை ஒன்றியக் குடியரசுகள் நிர்ணயிக்கின்றன. இவ்விஷயங்களைப் பற்றி முடிவு செய்கையில் ஒன்றியக் குடியரசு தனது வாழ்வியல் திட்டவட்டமான முறையையும் அதற்குப் பொருத்தமான வேறு காரணங்களிருப்பின் அவற்றையும் கணக்கில் எடுக்கிறது. இதன் விளைவாக பல்வேறு குடியரசுகளின் குற்றவியல் சட்டங்கள் சில அம்சங்களில் வேறுபடுகின்றன.

அரச நிர்மாணத்திலும், பொருளாதாரத்தை வளர்ப்பதிலும் அவற்றின் கலாசார வளர்ச்சியிலும் அதன் விளைவாக அவற்றுடன் இணைந்த சட்டவாக்கச் செயல்பாட்டிலும் சுயாட்சிக் குடியரசுகள் முழு அதிகாரத்தையும் பயன் படுத்துகின்றன, சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்புக்கும் ஒன்றிய சுயாட்சிக் குடியரசுகளின் அரசியல் யாப்புகளுக்கும் ஏற்ப சுயாட்சிக் குடியரகளின் கப்ரீம் சோவியத்துக்கள் பல முக்கியமான பிரச்னைகள் குறித்து சட்டங்களை ஏற்கின்றன.

சோவியத் ஒன்றியத்துக்கும் ஒன்றிய சுயாட்சிக் குடியரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் அரசியல் யாப்பு ரீதியாக வரையறுக்கப்பட்டதற்கேற்ப ஒரு திட்டவட்டமான சட்டங்களின் அமைப்பு வளர்ந்துள்ளது. அவை தமது சட்டரீதியான முன்னுரிமையில் வேறுபடுகின்றன. ஆனால் அவற்றுக்கு ஒரு நெருக்கமான பரஸ்பரத் தொடர்பு உள்ளது; ஒன்றுக்கொன்று உதவுகின்றன. சோவியத் சட்டங்களது ஒற்றுமையான அமைப்பு,அவை சோஷலிஸச் சட்டபூர்வத்தன்மை குறித்த லெனினியக் கோட்

பாட்டை பொதுவாகக் கடைப்பிடிக்கின்றன என்பதை உறுதி செய்கின்றது; சோவியத் ஒன்றியத்தின் சகல அமைப்புகள், சகல அதிகாரிகள் மற்றும் பிரஜைகள் சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களையும் அவற்றுக்கு ஏற்புடைய இதர சட்டப் பிரிவுகளையும் கண்டிப்போடும் முழுமையாகவும் ஒரே சீராக நிறைவேற்ற, கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பு தான் நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். சோவியத் ஒன்றியம், ஒன்றியக் குடியரசுகளின் அடிப்படைச் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு நேரடியாக உதவுகின்றன; கீழ்ப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட சட்டவாக்கப் பிரிவில் கடைப்பிடிக்கப்படவேண்டிய கோட்பாடுகளையும், நாடு முழுவதற்கும் சட்டரீதியில் ஒரேசீராக இருக்கவேண்டிய விஷயங்கள் குறித்த ஒழுங்கு முறைகளையும் இத்தாக்கீது முன்வைக்கிறது. அடிப்படைச் சட்டங்களில் உள்ள கோட்பாடுகளும் ஒழுங்கு விதிகளும் வளர்க்கப்பட்டு துணையாக்கப்பட்டு, பின்னர் இதர அகில ஒன்றிய, குடியரசு சட்டங்களில் ஸ்தூலமாக்கப்படுகின்றன. நாட்டின் அரசியல் யாப்புமற்றும் சோவியத் ஒன்றியம், ஒன்றியக் குடியசுகளின் சட்டவாக்க அடிப்படைகளின் அடிப்படையில் அரச— நிர்மாணம், நாட்டின் பொருளாதார, கலாசார வளர்ச்சி சம்பந்தமான பல்வேறு பிரச்னைகள் குறித்த சட்டங்களை சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் இயற்றுகிறது. இச் சட்டங்களில் சோவியத் அரசின் சமஷ்டி இயல்பு தெளிவாக வெளிப்படுகிறது. இவ்வாறு, மத்தியப்படுத்தப்பட்ட அரசாங்கம் ஒன்றியக் குடியரசுகளின் விரிவான அளவு சுதந்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

## சட்டவாக்க முன்முயற்சிக்கான உரிமை

சோவியத் யூனியனில் சட்டவாக்கநடைமுறையின் ஜனநாயக அடிப்படைக்கு நாட்டின் சட்டங்களால் விரித்துரைக்கப்பட்ட, ஊர்ஜிதம் செய்யப்பட்ட முறை பணிபுரிகிறது; இது மக்களின் சித்தத்தைப்

பரிபூரணமாக வெளிப்படுத்துவதற்கு ஏற்புடையதா யுள்ளது. ஒரு சட்டத்தை வரைவது, இறுதியாக ஏற்கச் செய்யும் பன்முகச் செயல்பாட்டில் முதல் கட்டம் சட்டவாக்க முன்முயற்சி—அதாவது சுப்ரீம் சோவியத்தில் நகலை அறிமுகஞ் செய்வது—ஆகும். ஓர் அரசு நிறுவனம், ஒரு பொது ஸ்தாபனம் அல்லது சட்டவாக்க முன்முயற்சி உரிமையுடைய நபர்களால் இது செய்யப்படலாம். ஒன்றிய சோவியத், தேசிய இனங்கள் சோவியத், தலைமைக் குழு, நிலைக்குழுக்கள், சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகள், சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவை, ஒன்றியக் குடியரசுகளின் அதியுயர்ந்த அதிகார உறுப்புகள், உயர் நீதிமன்றம், சோவியத் ஒன்றியத்தின் சட்ட மாஅதிபர் மற்றும் வெகுஜன, சமூக ஸ்தாபனங்களின் தேசிய (அகில ஒன்றிய) அமைப்புகளுக்கு இந்த உரிமையுண்டு.

சுப்ரீம் சோவியத் தலைமைக்குழு. சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவையின் சட்டவாக்க முன்முயற்சி அரசு ஏஜென்ஸிகளின் அமைப்பில் அவற்றினுடைய அதிகாரத்தின் தன்மையிலிருந்து எழுகிறது. ஆணைகளைப் பிறப்பிக்கும் ஒழுங்குமுறை, நாட்டின் அரசியல் யாப்புக்குத் திருத்தங்களைத் புகுத்துவது சம்பந்தமான சட்ட நகல்களையும் பிற சட்டவாக்க ஆலோசனைகளையும் தலைமைக் குழு முன்வைக்கிறது. நாட்டின் நடைமுறை விவகாரங்கள் சம்பந்தமான அரசியல் அதிகாரத்தின் அதியுயர் நிறைவேற்று மற்றும் நிர்வாக அமைப்பு என்ற வகையில் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான ராஜ்யத் திட்டம், ராஜ்ய வரவு—செலவு சம்பந்தமாகவும், தேசிய பொருளாதார, கலாசார வாழ்வு சம்பந்தப்பட்ட எல்லா பிரச்னைகள் பற்றியும் நகல் சட்டங்களை முன்வைக்கிறது. 1973ல் நிறைவேற்றப்பட்ட தேசியக் கல்வி பற்றிய சட்டம் இதற்கோர் உதாரணமாகும். 1975ல் அமைச்சரவையானது சம்பளங்கள், ஊதியங்கள் மீதான வரிவிதிப்பைக் கட்டங் கட்டமாக ஒழிக்கும் சட்டத்தைச் சமர்ப்பித்தது.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் நிலைக்குழுக்களும் இயல்பாகவே பல சந்தர்ப்பங்களில் சட்டவாக்க முன்முயற்சியைச் செய்கின்றன. உதாரணமாக சர்வதேச ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது, கைதுறப்பதற்கான நடைமுறைகளை சோவியத்தின் அயல்துறை விவகாரங்களுக்கான குழு சமர்ப்பித்தது. சட்டவாக்க ஆலோசனைகளுக்கான குழுக்கள் குற்றவியல் சட்டம், நீதிபரிபாலனமே, சட்டத்துறை நடைமுறைகள் போன்றவை சம்பந்தமான நகல்களைச் சமர்ப்பித்தன.

குறிப்பிட்ட ஒரு சட்டத்தை மேம்படுத்துவது அல்லது ரத்து செய்வதற்காக தொழிற்சங்கக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும், பத்திரிகைகளிலும் தொழிலாளர்களின் கடிதங்களிலும் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் பொதுமைப்படுத்தப்பட்டு அகில—யூனியன் சோவியத் சட்ட ஆராய்ச்சிக் கழகத்தால் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன, பல்வேறு சட்டத்துறைக் கிளைகளில் தனித் தேர்ச்சியாளர்களாக விளங்கும் இந்தக் கழகத்தின் ஊழியர்கள் ஆலோசனை அளிப்பவர்கள் என்ற வகையில் பங்குகொள்ளாத தனியொரு நகல் சட்டமோ, பிற முக்கிய சட்டவாக்கமோ கிடையாது எனலாம். சிலவேளைகளில் அவர்களுக்குக் கடுமையான வேலைப் பளுவும் இருக்கும்; உதாரணமாக, திருமணம், குடும்பம் பற்றிய நகல் சட்டம் சுப்ரீம் சோவியத்தால் பரிசீலிக்கப்பட்டதைக் கூறலாம்; வெகுஜன மற்றும் பல்வேறு ஸ்தாபனங்கள் முன்வைத்த ஆலோசனைகள், கருத்துக்களின் எண்ணிக்கை 15,000ஐத் தாண்டியது; இக் கழகத்தின் தனித் தேர்ச்சியாளர்கள் இவை ஒவ்வொன்றையும் கவனமுடன் ஆராய்ந்தனர்,

இந்தக் கழகம் அவ்வப்போது தான் பெறும் முக்கிய ஆலோசனைகள், கருத்துக்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி வெளியிடுகிறது, இத்தகைய சகல ஆலோசனைகளும் கவனமாகப் பரிசீலிக்கப்படுகின்றன; திரட்டப்பட்டுத் தொகுக்கப்படுகின்றன; புதிய சட்டங்களுக்கு அல்லது தற்போது பரிசீலனையில் உள்ள சட்டங்களுக்குச் சிபாரிசு

களைத் தயார்ப்படுத்துகையில்இதன் விளைவாக ஏற் பட்டுள்ள பகுப்பாய்வுகள் பயன்படுகின்றன.

இவ்வாறு அரசாங்க ஏஜென்ஸிகள், வெகுஜன அமைப்புகள், அல்லது தனிப்பட்ட பிரஜைகளின் சட்டவாக்க ஆலோசனைகளை ஆய்வதற்கான அமைப்பு முழுவதும் மக்களினதும் அரசினதும் நலன்களை கணக்கிலெடுக்கும், அதிகபட்ச அளவிற்குப் பிரதிபலிக்கும் நோக்கத்திற்குப் பயன்படுகிறது. சோவியத் யூனியனில் சட்டவாக்க அதிகாரத்தை சுப்ரீம் சோவியத் செயல்படுத்துகிறது, இது புதிய சட்டங்களைப் பரிசீலிக்கிறது, அல்லது அங்கீகரிக்கிறது அல்லது உத்தேச சட்டம் நாடு முழுவதன் வாழ்வுக்கும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் பட்சத்தில் அவற்றை நாடுதழுவிய வாக்குகளிப்புக்கு விடுகிறது.

# சோவியத் நாடாளுமன்றம் எவ்வாறு செயல்படுகிறது?

## உறுப்பினர்களும் வாக்காளர்களும்

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத், ஒன்றிய மற்றும் சுயாட்சிக் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துக்கள், மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆகியவற்றுக்கான பிரதிநிதிகள் தொழில் முறை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்ல. தொழில் நிறுவனங்கள் மற்றும் பொது, சமூக ஸ்தாபனங்களில் தாம் வழக்கமாகச் செய்கின்ற வேலையுடன் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது கடமைகளையும் இணைத்துச் செய்கின்றனர் தமது சொந்தத் தொகுதியில் வேலைசெய்து வாக்காளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் பிரதிநிதிகள், மக்களின் தேவைகள், அவசியங்களையும் தமது பிராந்தியத்தின் வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் அமலிலுள்ள சட்டவாக்கத்தின் நடைமுறைச் செயல்பாடு பற்றியும் நன்கு பரிச்சயம் கொண்டுள்ளனர். இடையறாத தொடர்பு கொண்டு சட்டவாக்க நடவடிக்கைகள் மூலம்

கையாளப்பட வேண்டிய பிரச்னைகள் குறித்து நடைமுறைப் போதமும் பெற்றுள்ளதால், இப் பிரதிநிதிகள் உத்தேசப் புதிய சட்டங்களை வகுப் பதில் அல்லது இருந்துவரும் சட்டங்களைத் திரு த்துவதில் அல்லது ரத்து செய்வதில் செயலூக்க முடன் பங்குபற்ற முடிகிறது.

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் பிரதிநிதியொருவருக்கு உழைக்கும் மக்கள் பால் பெரும் பொறுப்பு உள்ளது. இவர்கள், சட்டத்தை ஏற்கவும், மக்களின் வாழ்வையும் அரசின் எதிர் காலத்தையும் பாதிக்கும் முக்கிய பிரச்னைகளை முடிவு செயயவுமான அதிகாரம்இவர்களுக்கு அளிக் கப்பட்டுள்ளது. பிரதிநிதிகள் தமது வாக்காளர் களுக்குக் குறித்த கால இடைவெளியில் அறிக்கை செய்கின்றனர். உதாரணமாக, சகல மட்டங்களை யும் சேர்ந்த—கிராம சோவியத் முதல் சுப்ரீம் சோவியத் வரைப்பட்ட—பிரதிநிதிகளின் அறிக் கைகளைக் கேட்பதற்காக நடைபெற்ற கூட்டங் களில் i260 லட்சம் மக்கள், அல்லது நாட்டின் வயது வந்த மக்களில் மூன்றில் இரண்டு பங்கி னர், கலந்துகொண்டனர் என்று 1975க்கான புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

வாக்காளர்களுக்கு தான் செய்துள்ள, பணி தேர்தல் இயக்கத்தின் போது வாக்காளர்களால் தெரிவிக்கப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றுவதில் செய்து முடிக்கப்பட்டுள்ள வேலைபற்றி சட்டத்தின் படி சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் அல்லது ஒன்றியக் குடியரசு சுப்ரீம் சோவியத்தின் பிரதிநிதி ஆண்டுக்கு ஒரு தடவையாவது தனது வாக்காளர்களுக்கு அறிக்கை செய்ய வேண்டும்; ஸ்தல கிராம, நகர, பிராந்திய இன்னபிற-அதி கார அமைப்பின் பிரதிநிதி ஆண்டுக்கு இரண்டு தடவைக்குக் குறையாமல் அறிவிக்க வேண்டும். பிரதிநிதியை வேட்பாளராக நிறுத்திய அமைப் புக் கூட்டமைப்பு அல்லது வாக்காளர்களின் அதா வது வாழுகின்ற பிரதேச அடிப்படையில் வாக்கா ளர்களின் கூட்டத்தின் வேண்டுகோளின்படி இத்

தகையதொரு கூட்டம் எப்போது வேண்டுமானு லும் நடைபெறலாம்.

ஒரு பிரதிநிதி வாக்காளர்பாலான தனது பொறுப்பை மறந்து விடுவாரானுல் தனக்கு இடப் பட்ட ஆணையை நிறைவேற்றவில்லை என்ருல் அல்லது அறிக்கை செய்யத் தவறினுல் அவரை சோவியத்திலிருந்து திருப்பிப் பெறுவதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. 1972 ல் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் நிறைவேற்றிய பிரதிநிதிகளின் அந்தஸ்து குறித்த சட்டம் கூறு வதாவது: ஒரு பிரதிநிதி வாக்காளர்களின் நம்பிக் கைக்கு உகந்த முறையில் நடக்காவிட்டால் அல் லது ஒரு பிரதிநிதி எனும் உயர்பதவிக்கு தகுதி யற்ற முறையில் செயல்பட்டிருந்தால் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் பெரும்பாலான வாக்கா ளர்களின் முடிவுப்படி அவர் திருப்பி அழைக்கப்ப டலாம். இது ஒரு சம்பிரதாய பூர்வ ஏட்டளவி லான உரிமை மட்டுமல்ல என்பது அப்போதைக்கப் போது நிரூபிக்கப்படுகிறது. உதாரணமாக உக்ரேனி லுள்ள பெலயா எசர்க்கோவ் பிராந்தியத்தின் முன்னுள் பிரதிநிதியான பியோதர் த்சாப் சம் பந்தப்பட்ட மட்டிலும் அவருக்கு அவரது வாக் காளர்களின் வேண்டுகோளின் படி அவரது தவ ணைக் காலம் முடிவதற்குள் ஒரு பிரதிநிதி என்ற முறையிலான பொறுப்புக்களிலிருந்து அண்மையில் விலக்களிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு காரணம் வருமாறு: சோவியத்தின் கலாசார விவகாரங்கள் துறைக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று அதன் நிர்வா கக் கமிட்டியினுல் பியோதர் த்சாப் நியமிக்கப்பட் டார். கலாசார பிரிவின் இயக்குநர் என்ற வகையி லும் ஒரு பிரதிநிதி என்ற வகையிலும் ஒரு பிரதி நிதி என்ற வகையிலும் அவர் மக்களின் சகல ஆலோசனைகள், விண்ணப்பங்கள், வேண்டுகோள் கள், புகார்களைப் பரிசீலனை செய்து அவற்றிற்குப் பதிலளிக்கவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க கோரப்பட்டார். எனினும் த்சாப் பல சந்தர்ப்பங் களில் தனது பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து,

விண்ணப்பங்கள், வேண்டுகோள்களைப் புறக்கணித் தார் வாக்காளர்கள் ஒரு பிரதிநிதி என்ற வகை யில் அவரது பணிபற்றி அறிக்கை சமாப்பிக்கும் படி கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர் அவரை சோவியத்திலிருந்து திருப்பி அழைத்து அவருக்குப் பதிலாக வேறு ஒருவரைத் தேர்ந் தெடுத்தனர்.

மொத்தத்தில் நாடு முழுவதிலும் உள்ள பல் வேறு சோவியத்துக்களில் 22 லட்சத்துக்கு மேற் பட்டோர் அங்கம் வகிக்கின்றனர். எனவே வாக்கா ளர்கள் வெகு கவனமுடன் தமது வேட்பாளர் களைத் தேர்ந்தெடுத்த போதிலும் தவறுகள் ஏற் படக்கூடும். பொருத்தமற்ற நபரை தேர்ந்தெடுப் பதற்கான வாய்ப்பு இருக்கவே செய்கிறது. மேலே குறிப்பிட்டது போல இத்தகைய தவறுகள் ஏற் படவே செய்கின்றன. ஆனால் அவை வெகு அரிது வாக்காளர்கள் சம்பந்தமான பிரதிநிதியின் பொறுப்பு வெறும் சம்பிரதாய பூர்வமான பிரதி பலிப்பு அல்ல, சகல மட்டங்களையும் சேர்ந்த நாட் டின் அதிகார அமைப்புகளின் ஸ்தாபன ஒழுங்க மைப்பு மற்றும் பணியின் பிரதான கோட்பாடா கும், வாக்காளர்களின் ஆணை தேர்தல் இயக்கத் தின் போது தேர்தல் கூட்டங்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டு பிரதிநிதிக்குக் கூட்டாக அளிக்க ப்பட்ட ஒரு வகை உத்தரவாதமாகும். கீழே கொடுக்கப்படும் விபரம் இந்தவிஷயத்தைத் தெளிவு படுத்தும்.

## ஒரு பிரதிநிதி சட்டத்தை முன் மொழிகிறார்

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தில் யாகுத் சுயாட்சிக் குடியரசை 13 பேர் பிரதி நிதித்துவம் வகிக்கின்றனர். அவர்களில் ஒருவர் புரோ சோவி ஸ்லெப்த்சோவ். அவர் எவங்கி தேசிய இனத்தவர். அவருடைய தொழில் மான் வளர்ப்பு (1970 மக்கட் தொகை கணக்குப்படி நாட்டிலிரு ந்த எவெங்கிகளின் எண்ணிக்கை 12,000) சோவி யா தேர்தல் தொகுதி மக்கள் நாட்டின் ஆக உயர்ந்த சட்டவாக்க அமைப்புக்கு பிரதிநிதியாக

ஸ்லெப்த்சோவை நியமித்தனர், அங்குள்ள மக்கள் தொகை 60,000க்கு சற்றே அதிகம். ஆனல் ஏழு துருவ, அநேகமாக துருவபிராந்தியங்கள் கொண்ட இந்த மாவட்டத்தின் பிரதேசத்தின் மொத்த பரப்பளவு பிரான்சை விட அதிகமானதாகும்.

பிரதிநிதி, வாக்காளர்களுடன் நடத்திய சந்திப்பு ஒன்றின் போது வனப்பாதுகாப்பை உத்தரவாதம் செய்யக் கூடிய சட்டத்தின் அவசியத்தைப் பற்றிய கேள்வி எழுந்தது. வனத்தைப் பாதுகாப்பது பற்றி கவனம் செலுத்துவதன் அவசியம் தெட்டத் தெளிவானதாகத் தோன்றக் கூடும். ஆனல் இதன் ஜீவாதார முக்கியத்துவம் சில சந்தர்ப்பங்களில் குறிப்பாகத் தற்போதைய தொழில் நுட்ப முன்னேற்றத்தின் வேகமான விகிதத்தின் நிர்ப்பந்தம் காரணமாக உதாசீனம் செய்யப்படுகிறது. எனவே வனப்பாதுகாப்புச் சட்டம் இன்றியமையாதது.

நாட்டின் பசுமைச் செல்வத்தைப் பாதுகாப்பது பற்றிய அக்கறை யாகுதியாவின் விஷயம் மட்டுமல்ல. லெனின் கிராட் வனவள பொறியியல் கழகத்தின் விஞ்ஞான ஊழியர்கள் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவிற்கு இது சம்பந்தமாக ஆலோசனை முன்வைத்திருப்பது பற்றி நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். இது சம்பந்தமாக பல கடிதங்கள் சோவியத் பத்திரிகைகளில்—இஸ்வெஸ்தியா செலெஸ்கயாஜின்ஸ் மெஸ்னயா, புரோமிஷெல், நோஸ்த்—வெளியிடப்பட்டுள்ளன. இப்பத்திரிகைகளின் ஒட்டுமொத்த விநியோகம் கிட்டதட்ட 2 கோடி பிரதிகள் ஆகும்.

மாபெரும் ருஷ்ய வனம் வேகமாகக் குறைந்து போகும் அபாயம் அல்ல இப்போதைய பிரச்சினை. நாட்டின் மரவளம் 8.200 கனமீட்டர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவை தவிர வனத்தைப் பயன்படுத்தும் நாடு முழுவதிலும் உள்ள நிறுவனங்கள் சாய்க்கப்பட்ட ஒவ்வொரு மரத்திற்குப்

பதிலாக இரண்டு மரங்களை நட வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஸ்தல அளவில் தொழிலாளிகள் சில சந்தர்ப்பங்களில் ஆற்றுக் கட்டுப்பாட்டில் ஜீவாதாரமான பாத்திரம் வகிக்கின்ற மரங்களை தொடக்கூடாது என்ற போதிலும் அவற்றை வீழ்த்துகின்றனர். மாங்களை வீழ்த்தும் போது, இழுத்துச் செல்லும் போது அறுக்கும் போது, எடுத்துச் செல்லும் போது, மரக்கட்டைகள் மர சாமான்களாக மாற்றும் போது இழப்புக்கள் ஏற்படக்கூடும். தொழில், விவசாயம் வனத்துறைக்கு இடையேயான பரஸ்பர, உறவுகளை முக்கியமாகக் கவனிப்பதை கட்டுப்பாடு செய்வதை இது பொருட்படுத்துகிறது.

புரோசோபி ஸ்லெத் சோவ் இதர பிரதிநிதிகளுடன் இணைந்து கொண்டு வனப்பாதுகாப்பு சம்பந்தமாக சட்டங்கள் வேண்டுமென்று முன்மொழிந்தார். 1977 துவக்கத்தில் நாட்டின் வனங்களைப் பாதுகாப்பது சம்பந்தமாக சோவியத் ஒன்றியம் மற்றும் ஒன்றியக் குடியரசுகளின் நகல் சட்டம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, நாடு தழுவிய விவாதத்திற்கு பின்னர் 1977 ஜுன் மாதத்தில் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் நிறைவேற்றியது. அது, நாட்டின் வாழ்வில் வளங்களின் பாத்திரத்தைவரையறுத்து அவற்றை பயன்படுத்துவதற்கானமுறை, அனுமதிக்கப்பட்ட அளவை நிர்ணயித்தது.

## நகல் சட்டம் பற்றிய விவாதம்

எந்தச் சட்டத்தின் ஒரு நகலும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் குழுக்களின் பூர்வாங்க அல்லது ஆராய்ச்சிக் கட்டத்தினூடாகச் செல்கிறது. சுப்ரீம் சோவியத்தின் ஒவ்வொரு சபைக்கும் பதினைந்து நிலைக்குழுக்கள் உள்ளன. அவையாவன. தகுதி ஆய்வு, சட்டவாக்க ஆலோசனைகள் திட்டமிடுதல் மற்றும் பட்ஜெட் அயல்துறை விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள், பெண்களின் வாழ்க்கை, வேலை நிலைமைகள், தாய்மை மற்றும் குழந்தை பராமரிப்பு தொழில்

கள், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு, நிர்மாணம் மற்றும் கட்டட சாதனங்கள் தொழில் விவசாயம், சுகாதாரம், மற்றும் சமூக பாதுகாப்பு, கல்வி விஞ்ஞான மற்றும் கலாசாரம் வர்த்தகம், வீட்டு வசதி சேவைகள் மற்றும் மாநகர சேவைகள். இயற்கைப் பாதுகாப்பு நுகர்வோர் பண்டங்கள் சுப்ரீம் சோவியத்தின் மொத்தப் பிரதிநிதிகளில் மூன்றில் இருவர் முப்பது நிலைக் குழுக்களில் பணியாற்றுகின்றனர்.

இரு சபைகளாலும் பரிசீலனை செய்வதற்காக அனுப்பப்பட்ட நகல் சட்டம், இதர விஷயங்கள் பற்றி குழுக்கள் அறிக்கை சமர்ப்பித்து தமது சொந்த முன்முயற்சியின் பேரிலும், சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் பணிப்பின் பேரிலும் நகல் சட்டங்களை வகுக்கின்றன. இக் குழுக்கள் அவர்களை நியமித்துள்ள சபைகளுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டு அவற்றுக்குப் பொறுப்புடையனவாகும்.

சகல நகல் சட்டங்களும் பூர்வாங்க ஆய்வுக்காக நிலைக்குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன, உதாரணமாக (இரு சபைகளின்) சட்டவாக்க ஆலோசனைகள் குழுவால் தயாரிக்கப்பட்டு நிலச் சட்டத்தின் நகல் பரிசீலனைக்காக வேறு எட்டுக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டது, இம்முறையில் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின், பல்வேறு குடியரசுகள், பிராந்தியங்களின் நலன்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன, எதிர்காலச் சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்க அமைப்புக்கள், வெகுஜன ஸ்தாபனங்களின் முயற்சிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன,

சுப்ரீம் சோவியத்தின் இரு சபைகளில் மாற்றங்கள், திருத்தங்களைப் புகுத்தமுடியும், அதை மறுதளிக்கவும் முடியும்; எனவே, ஒன்றிய சோவியத் மற்றும் தேசிய இனங்கள் சோவியத்தின் சட்ட வாக்க ஆலோசனைகளுக்கான இரண்டு நிலைக்குழுக்களுக்கு முக்கிய பாத்திரம் உள்ளது, அவற்றுக்குக் கணிசமான அதிகாரங்களும் இணையான பொறுப்புக்களும் உள்ளன, இக்குழுக்களில் பணியாற்றும் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் பரிசீல

ளையில் உள்ள சட்டத்தின் சாரத்தை ஆழமாகப் பரிசீலனை செய்வதற்கும் விவரங்களை ஆராய்வதற்கும், நகல் சம்பந்தமாக தனது சம்மதத்தையோ மறுப்பையோ தெரிவிப்பதற்கு முன்பு சாதக பாதகங்களைப் பரிசீலனை செய்வதற்கும் வாய்ப்புக்கள் உள்ளது.

சட்டத்தின் ஆரம்ப நகல் ஒன்றியக் குடியரசுகளுக்கும் அமைச்சரவைக்கும் அரசாங்க திணைக்களங்களுக்கும் சம்பந்தப்பட்ட தலையாய ஆராய்ச்சி அமைப்புக்களுக்கும் அபிராயத்திற்காக அனுப்பப்படுகின்றது.குடியரசு மட்டத்திலும் ஸ்தல மட்டத்திலும் அதிகாரபூர்வ அமைப்புகளும் நிறுவனங்களும் பொது ஸ்தாபனங்களும் நகல் சட்டத்தைப் பற்றி விவாதம் செய்யும் செயல்பாட்டுக்கு உதவி புரிவதற்காகக் குழுவின் உறுப்பினர்கள் பல்வேறு குடியரசுகளுக்கும் பயணம் செய்கின்றனர். குடியரசுகளிடமிருந்தும் மற்றும் பல அக்கறையுடைய தரப்புக்களிடமிருந்தும் சகல கருத்துக்கள், விமர்சனங்கள், உத்தேச இணைப்புக்கள் ஆகியவற்றை குழுக்கள் பெற்றுக் கொண்டு பின்னர், நகல் சட்டம் தேவைபடுகிற முறையில் திருத்தப்பட்டு, சுப்ரீம் சோவியத்தின் தலைமை குழுவிற்கு அனுப்பப்படுவதற்காக செம்மைப்படுத்தப்படுகிறது.

## சுப்ரீம் சோவியத் முடிவு செய்கிறது

நாடு தழுவிய விவாதக் கட்டத்தைச் தாண்டிச் சென்று, இரு சபைகளின் குழுக்களால் பூரணமாக தயாரிக்கப்பட்ட பின்னர் நகல் சட்டம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்துக்கு பரிசீலனைக்காக அனுப்பப்படுகிறது. சுப்ரீம் சோவியத்தின் முதன் முதல் கூட்டங்களிலிருந்து பொதுவாக இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்காக புதிய சட்டம் சம்பந்தமாக ஓர் அறிக்கை சமர்ப்பிப்பது மரபாகஇருந்து வருகின்றது. விவாதத்திற்காக நகல் சட்டத்தைச் சமர்ப்பிக்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அல்லது நபர்கள் ஓர் அறிக்கையை சமர்ப்பித்து தனது கருத்தை ஆதரித்துப் பேசுகின்றனர். பின்னர்,நகலை

வகுப்பதிலும் பெறப்பட்ட சகல ஆலோசனைகள், விமர்சனங்களை பிரித்துப் பகுப்பாய்வு செய்வதிலும் பங்கு கொண்ட குழுக்கள் அல்லது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தமது கருத்தைத் தெரிவிக்கின்றனர். விவாதம் எப்படி நடத்தப்படவேண்டும்—சபைகளின் தனிக் கூட்டங்களிலா கூட்டக் கூட்டங்களிலா—என்பது பிரதிநிதிகளால் முடிவு செய்யப்படுகிறது. கூட்டத்தின் பணியின் முறை இரு சபைகளின் வாக்குகள் மூலமாக நிர்ணயிக்கப்படுகிறது. விவாதம் சுப்ரீம் சோவியத்தின் பிரதிநிதிகளுக்கு மட்டும் குறுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க, பொது ஸ்தாபனங்கள், கல்விஅமைப்புக்கள், மற்றும் விஷேச அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் என்ற முறையில் தமது கருத்தைத் அனுபவமுடைய தனித்தேர்ச்சியாளர்கள் விவாதிக்கின்றனர்.

விவாதத்திற்குப் பின்னர் நகலுக்கு என்னென்ன திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பது முடிவு செய்யப்படுகின்றது. அவை பிரதிநிதிகள் தம்மாலோ அல்லது தாம் உறுப்பினராயுள்ள நிலைக்குழுக்கள் சார்பிலோ அல்லது நகலை முன்மொழிந்தவர்களாலோ முன்வைக்கப்படுகின்றன. ஒரு சபையில் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் பரிசீலனைக்காக மறுசபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. உத்தேச திருத்தங்களை வகுப்பது, சேர்ப்பது சம அடிப்படையில் இந் நோக்கத்திற்காக நிறுவப்பட்ட இரு சபைகளின் ஒரு விசேஷ குழுவால் நிறைவேற்றப்படுகிறது.

சபை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது முன்வைக்கப்படுகின்ற திருத்தங்களுக்குத் தான் இத்தகைய நடைமுறை பொருந்தும். நிலைக்குழுக்களில் நகல்களின் வாசகத்தின் மீதான பணியின் போது அதில் சேர்க்கப்பட்டுள்ள திருத்தங்களைப் பற்றி பிரதிநிதிகளுக்கு அறிக்கையில் கூறப்படுகிறது. திருத்தங்கள் மற்றும் ஓட்டு மொத்தமாக சட்டத்தின் நகல்பற்றிய விவாதத்திற்குப் பின்னர் இந் நகல் சட்டம் பகிரங்க வாக்குகள் மூலமாக தனித்

தனி சபைகளின் பிரதிநிதிகளால் ஏற்கப்படுகின்றது.

ஒன்றிய சோவியத்துக்கும் தேசிய இனங்கள் சோவியத்துக்கும் வேற்றுமை ஏற்பட்டால் விவாதத்திற்குரிய பிரச்சினை சம அடிப்படையில் இரு சபைகளின் பிரதிநிதிகள் கொண்ட சமரசக் குழுவுக்கு அனுப்பப்படுகிறது. பின்னர் அது இரண்டாவது தடவையாக கூட்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றது. இந்தச் சமயத்திலும் ஒற்றுமை ஏற்படாவிட்டால் இந்தப் பிரச்சினை சுப்ரீம் சோவியத்தின் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது. அல்லது நாடு தழுவிய வாக்கெடுப்புக்கான விஷயமாக மாற்றப்படுகிறது.

இரு சபைகளாலும் ஏற்கப்பட்ட சட்டத்தின் வாசகம் சபைகளின் தலைவர்களின் முத்திரை இடப்பட்டு சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவின் தலைவருக்கும் செயலாளருக்கும் கையெழுத்திடப்படுவதற்காக அனுப்பப்படுகிறது. சோவியத் யூனியனில் இரு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சட்டத்தை ரத்து செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது. எனவே, இந்த அதிகாரிகளின் கையெழுத்துக்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தின் வாசகம் ஏற்கப்பட்டு விட்டது என்பதைத்தான் குறிப்பிடுகின்றன.

## சுப்ரீம் சோவியத் கட்டங்களுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில்

பொதுவாக சுப்ரீம் சோவியத்தின் கூட்டங்கள் ஆண்டுக்கு இரு தடவைகள் நடைபெறுகின்றன. அவ்வப்போது விசேடக் கூட்டங்களும் கூட்டப்படுகின்றன. கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் சுப்ரீம் சோவியத்தின் சட்டவாக்க பணிகள் அதன் நிரந்தர செயல் அமைப்பினுல் தலைமைக் குழுவினுல் நிறை வேற்றப்படுகிறது. அது சட்டமியற்றல் தன்மை வாய்ந்த உத்தரவுகள் உட்பட அரசவாழ்வின் ஜீவாதார விடயங்கள் குறித்து பல்வேறு உத்தரவுகள் ஆணைகளைப் பிறப்பிக்கின்றது. சட்டவலுவுள்ள இவையனைத்தும் நாட்டின் பிர

தேசம் முழுவதிலும் நிபந்தனை இன்றி கடைப்பிடிக்கப்பட்டாக வேண்டும். இதேபோன்று தேசியப் பொருளாதாரத்தின் நிர்வாகம் சம்பந்தமான சகல விஷயங்களிலும் தலைமைக் குழு முடிவுகளை எடுக்கின்றது.

கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் அண்மை ஆண்டுகளில் தலைமைக் குழு எடுத்த நடவடிக்கைகளுக்கு சான்றாக வீட்டுவசதி, வேலைநிலைமைகள் சோவியத் பிரஜைகளின் வாரிசு, உரிமை, இதர உரிமைகள் தொழிலாளிகள், ஊழியர்களின் ஓய்வூதிய ஷரத்துகளை சீரமைப்பதற்கான உத்தரவுகள, மேலும் சிறப்பான வேலை நிலைமைகளை உருவாக்கித்தருதல், இள வயதினருக்கு விடுமுறை மற்றும் அன்றாட வசதிகள், பெருங்குடும்பங்களுக்கும், சணவன் இல்லாத தாய்மார்களுக்கும், கூடுதல் உதவி ஆகியவை சம்பந்தமான முடிவுகள் உதாரணங்களாகும். சர்வதேச சட்டங்களுக்கேற்பவும் உள் நாட்டு மட்டும் சர்வதேசிய விமானப்பாதைகளில் கூடுதல் பாதுகாப்பை முன்னிட்டும் தலைமைக் குழுவானது விமானத்தைக்,கடத்திச் செல்வதை ஒரு குற்றமாக்கும் ஒரு சட்டத்தையும் ஏற்றது. எனினும் சுப்ரீம் சோவியத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய ஓர் அமைப்பாக தலைமைக்குழு இருப்பதால் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பிரகடனம் செய்யப்பட்ட சட்டத்தன்மை வாய்ந்த சகல ஆணைகளும் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்காக சுப்ரீம் சோவியத்தின் அடுத்தக் கூட்டத்திற்கு தலைமைக்குழுவினால் அனுப்பிய வைக்கப்படுகிறது. தலைமைக் குழுவின் செயலாளர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு ஆதரவாக வாதங்களைத் தருகிறார். மக்களுக்கு அது என்ன நன்மை புரிய முடியும், தற்போது அமலிலுள்ள சட்டங்களின் அமைப்புக்கு அது எவ்வாறு ஏற்புடையதாயிருக்கிறது என்று விளக்குகிறார். இது தவிர கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலசட்டத்தில் சகல விளக்கமான தகவல் குறித்த காலங்களில் தரப்படுகிறது.

சட்டங்கள், ஆணைகள் ஏற்கப்படுவதற்கு பத்திரிகைகளில் விரிவான விளம்பரம் தரப்படுகிறது. அவை ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஏழு நாட்களுக்குள் இது செய்யப்பட்டாக வேண்டும். மக்களுக்கு புதிய சட்டங்களைப் பற்றித் தெரிவிப்பதோடு மட்டுமின்றி இதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பும் எப்போது சட்டம் அமுலுக்கு வருகிறது என்னும் கால வரம்புடன் இணைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டத்திலோ இதரவற்றிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சட்டங்களும் சட்டத்தன்மை வாய்ந்த உத்தரவுகளும் நாட்டின் பிரதேசம் முழுவதிலும் அது வெளியிடப்பட்டதற்கு பத்து நாட்களுக்குப் பின்னர் ஒரே சமயத்தில் அமுலுக்கு வருகின்றன. முக்கிய சட்டம், உதாரணமாக அடிப்படைச் சட்டங்கள் ஏற்கப்பட்ட பின்னர் அவை அமலுக்கு வருவதற்கு போதுமான நீண்ட காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய சட்டத்தை பொதுவாக மக்கள் அனைவரும் பூரணமாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தக் காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தகைய சட்டங்களுக்கு ஸ்தாபன சட்டத்தன்மை கொண்ட பல நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகிறது. இதற்கும் போதிய அவகாசம் தேவை.

சட்டங்களையும் ஆணைகளையும் வெளியிடுவதற்கான பொறுப்பு சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவைச் சார்ந்தது. சுப்ரீம் சோவியத் கூட்டத்தின் சுருக்கெழுத்து விவரங்களை வெளியிரும் பொறுப்பும் "சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத்தின் செய்திகள்" என்பதை வெளியிடும் பொறுப்பும் அதைச் சேர்ந்ததே அந்த அதிகார பூர்வமான வெளியீடு சுப்ரீம் சோவியத்தும் அதன் தலைமைக் குழுவும் ஏற்றுக் கொண்டுள்ள சட்டங்களை ஒன்றியக் குடியரசுகளின் பல்வேறு மொழிகளில் பதிவு செய்கிறது. மற்றும் அதில் அதி உயர்ந்த சட்டவாக்க அமைப்பு அதன் குழுக்களின் கூட்டங்கள்

குறித்தும் நாடாளு மன்றத்தூதுக் குழுவின் பரி வர்த்தனை விஜயங்கள் மற்றும் இதர விஷயங்கள் பற்றியதும் ஆன அறிக்கைகள் அடங்கியுள்ளன.

## ஏற்கப்பட்டுள்ள சட்டங்களின் வகை

சோவியத் சட்டங்கள் மக்களின் நல்வாழ்வை ஊக்குவிப்பதற்கும் சோவியத் அரசின் அடித் தளத்தை வலுப்படுத்துவதற்கும் சோஷலிச ஜன நாயகத்தை வளர்க்கவும் உருவாக்கப்பட்டுள்ளன. சோவியத் சட்டங்களின் பிரதான நோக்கம் இதுவே. அன்னைமக் காலக் கட்டங்கள். சுகாதாரப் பாதுகாப்பு, தேசியக் கல்வி. நிலத்தையும் கனிச் செல்வத்தையும் நீர் வளங்களையும் பயன்படுத்தல் ஆகியவை சம்பத்தமான சட்டங்கள், ஸ்தல சோவியத்துக்களின் உரிமைகள் பொறுப்புக்கள் பற் றிய சட்டங்கள். சோவியத் ஒன்றியத்தின் புதிய அரசியல் யாப்பை பட்டியலிட்டுக் காட்டினுல் இது தெளிவாகும்.

புதிய சட்டங்கள் எதற்காகத் தேவைப்படு கின்றன? பிரதானமாக சமுதாய வளர்ச்சியின் இயக்காற்றலினுல் தேவைப்படுகிறது. பொருளா தாரத்திலும் மக்களின் பொதுவான நலவாழ்வை யும் சுபீட்சத்தையும் ஊக்குவிப்பதை நோக்க மாகக் கொண்ட பிரதான சமூக வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதிலும், தேசத்தின் அரசி யல், சமூக வாழ்வின் ஜனநாயக அடிப்படையை வலுப்படுத்துவதிலும். விரிவுபடுத்துவதிலும் அதிக கரிப்பு உள்ளது. இவை அனைத்தும் சமுதாயம் எய்தியுள்ள புதிய மட்டத்திற்கு ஏற்பவும் அதன் மேலும் வளர்ச்சி வாய்ப்புக்களைக்கணக்கில் எடுக்துக் கொள்வதன் அடிப்படையிலும் சட்ட வசதிகள் செய்வதற்கான அவசியத்தை உருவாக்குகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் இத்துறையில் என்ன செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது? நாட்டின் புதிய அடிப்படைச் சட்டம் 1977ல் ஏற்கப்படுவது தொடர்பாக சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு வானது சோவியத் ஒன்றியத்தின் சட்டங்களை அரசியல் யாப்பிற்கு ஏற்ப கொண்டு வருவதற்கான

ஒரு வேலைத் திட்டத்தை ஒப்புக்கொண்டது. இத் திட்டம் பற்பல சட்டங்களுடன் இதர சட்ட ஏற் பாட்டுக்கும் விரித்துரைக்கப் படுவதற்கும் தற்போ தைய சட்டங்களுக்குத் திருத்தங்கள், சேர்ப்புகளை இணைத்துக் கொள்வதற்கும் வகை செய்கிறது.

பொருளாதாரத் திட்டமிடலுக்கு ஏற்ப, தொழிலாளர் பாதுகாப்பை அபிவிருத்தி செய் வதை, சம்பளம், ஊதியங்களில் மேலும் அபிவிருத் தியை வகை செய்வதை, உழைப்பின் உற்பத்தி ஆற்றல் அதிகரிப்பதை, ஊக்குவிப்பதை நோக்க மாகக் கொண்டு சட்டங்கள் இயற்றும் நடவடிக் கள் முறையாக எடுக்கப்பட்டு வருகின்றன உழைப் புக் கூட்டுக்களின் உரிமைகள் குறித்தும் சட்டங் கள் வகுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக அண்மையில் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு வானது ஆரோக்கியத்திற்கு பாதகமான வேலை யில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பென்ஷன் தொகையை அதிகரிக்கும் நோக்கமுடைய ஒரு ஆணையையும், சமூக கலாசார நோக்கங்களுக்காக பெரும் தொகைகளை ஒதுக்கும் ஒரு நிதி நடவடிக் கையையும் ஊர்ஜிதம் செய்தது.

சோஷலிச ஜனநாயகமும் இன்னும் சட்ட பூர்வமாக வளர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக பல ஆண்டுகட்கு முன்பு கிராம, குடியிருப்பு, மாவட்ட, நகர சோவியத்துக்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்களை அளிக்கும் சட்டங்கள் ஏற்கப் பட்டன. மேலும் தற்போது பிரதேச, பிராந்திய மற்றும் பகுதி அதிகார அமைப்புகளுக்கு இன்னும் அதிக அதிகாரங்களை வழங்கும் புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. வளிமண்டலத்தின் தூய் மையை பாதுகாக்கும், வன விலங்குகளைப் பாகாக்க படுவதை உத்தரவாதம் செய்யும் சட்டங்கள் வகுப்பது உட்பட இயற்கைப் பாதுகாப்புத் துறை சட்டங்களை மேலும் வளர்ப்பது பற்றிய பணி தொடர்ந்து வருகின்றது.

இறுதியாக, சோவியத் ஒன்றியத்தின் சட்டத் தொகுப்பை உருவாக்குவதற்கான தயாரிப்புக்கள் பற்றி குறிப்பிட்டாக வேண்டும். இந்த விரிவான

சட்டத் தொகுப்புத் தாக்கிது சோவியத் சட்டம், ஒழுங்கின் அமைப்புமுறை முழுவதையும் வலுப்படுத்தவும், அதே சமயத்தில் நாட்டின் சட்டங்களை சகல பிரஜைகளுக்கும் அதிகபட்ச அளவிற்கு பயன்படச் செய்யவும் கோரப்பட்டுள்ளது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி, சோவியத் ஒன்றிய சுப்ரீம் சோவியத்தின் தலைமைக்குழு, சோவியத் யூனியன் அமைச்சரவை ஆகியவற்றின் முடிவுப்படி சட்டத் தொகுப்பை தயாரிப்பதையும் வெளியிடுவதையும் பொதுவாக மேற்பார்வையிடுவதற்காக ஒரு விசேஷக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவுக்கு சோவியத் ஒன்றியத்தின் நீதி அமைச்சர் தலைமை தாங்குகிறார்.

பல ஆண்டுகள்வரை நீடிக்கக்கூடிய பன்முகக் தன்மை வாய்ந்த கடினமான பணி சட்டங்களைக் தொகுப்பதற்குத் தேவைப்படும். மற்றும் ஒரு பொருத்தமான சட்ட அடிப்படை இருக்கவேண்டும் சோவியத் ஒன்றியத்தின் தற்போதைய சட்டங்கள் சம்பந்தமான பூரண பட்டியல் மூலமாக இந்தகையதொரு அடிப்படை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல்—சகல தற்போதைய சட்டங்களின் ஒரு வகையான "பட்டியல்" இது—வெகு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சட்டத் தொகுப்பை உருவாக்குவதில் இது இன்றியமையாத கட்டமாகும். இத்தகையதொரு "பட்டியல்" ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது—சகல தற்போதைய சட்டங்களையும் நிலைநாட்டி அவை மொத்தத்தில் எவ்வாறு "செயல்படுகின்றன" என்று கண்டுகொள்ளவும் முன்பு ஏற்கப்பட்ட சட்டங்களுக்கு முரணாக விளங்கக் கூடிய எந்தச் சட்டங்களாவது இருக்கின்றனவா என்று உறுதிபடுத்திக் கொள்ளவும் வகை செய்கின்றன. அவசியமான புதிய சட்டங்கள் இயற்றப்படுவது தெளிவாயிருக்கின்றது. அதே போன்று ஏற்கனவே அமுலில் உள்ள சட்டங்களை திருத்துவது அல்லது ரத்து செய்வதற்கான அவசியமும் உள்ளது.

சட்டத் தொகுப்பில்சேர்ப்பதற்குபாதகமில்லாத வகையில் சட்டமியற்றலுக்குத் தயாரிப்பு செய்

வதில் சோவியத் ஒன்றிய சட்டங்கள், ஒன்றியக் குடியரசுகளின் சட்டங்கள் கொண்ட ஓர் அரசாங்க பதிவேடு பெருமுக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும். இத்தகையதொரு பதிவேட்டை தொகுக்கும் பணி நீதி அமைச்சின் கீழ் இயங்கும் அகில யூனியன் சட்ட ஆராய்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள சட்டங்களின் ஒரு தரமான குறிப்பேடாக அது இருக்கும்; இந்தத் தொகுப்பின் அடிப்படையில் சகல அமைச்சகங் களும் அரசாங்கத் திணைக்களங்களும் தமது நகவல் விஷயங்கள் தற்போது அமலில் உள்ள சட்டங் களுக்கு ஏற்புடையனவாக இருக்கின்றனவா என்று சரிபார்த்து கொள்ள முடியும். சட்டத் தொகுபபு சம்பந்தமான பணியானது சோவியத் அரசின் ஜன நாயக அடிப்படையை மேலும் வலுப்படுத்து வதையும் சட்டமுறை சட்ட, ஒழுங்கை முரணின்றி வலுப்படுத்துவதையும் தொழிலாளிகளின் அரசியல் சமூக, பொருளாதார உரிமைகள் உறுதியாக உத்தரவாதம் செய்யப்படுவதை உறுதிப்படுத்து வதையும் நோக்கமாகக் கொண்டதாகும். பொரு ளாதார நடவடிக்கைகளைச் சட்டபூர்வமாகக் கட்டுப் படுத்துவதைச் செயல்படுத்துவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் நிச்சயமாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும்.

மேலும் சட்டத் தொகுப்பு வெளியிடப்படுகி றது என்னும் உண்மையே நாட்டின் சட்டங்கள் சகல சோவியத் மக்களுக்கும் இன்னும் அதிகமா க்க கிடைக்கக் கூடியதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தக் கிடைக்கும் தன்மை சகல பொருத் தமான சட்டத்தாக்கீதுகளையும் தெளிவாக எடுத் துரைக்கும், முற்றிலும் நன்கு கருத்தப்பட்டு கவன முடன் வகுக்கப்பட முறை மூலமாக உத்தரவாதம் செய்யப்படும். சாதாரண மனிதன் கூட எந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலும் சட்டத்தின் நிலை எவ் வாறு உள்ளது என்பதை சுலபமாகக் கண்டு கொள் ளக் கூடிய முறையில் கொடுக்கப்படும் சட்டத் தொகுப்பில் சம்பந்தப்பட்ட குறிப்பு விஷயங்களும் இருக்கும்.

# ஒவ்வொருவருக்கும் சட்ட அறிவு

சட்டத்தைப் புரிந்து கொள்வதால் மக்களின் மட்டத்தை உயர்த்துவது புதிய மனிதனை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய சாதனமாகும். என்று லெனின் கருதினர். சட்டம் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுவதை மேற்பார்வையிடுவதில் தொழிலாளிக்கும் விவசாயிகளுக்கும் சுதந்திரமாக நடைமுறையில் பங்கு கொள்ளும் உணர்வில் போதமளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தனிநபரும், ஒவ்வொரு பிரஜையும் அறிவு பூர்வ விவாதங்களிலும் அரசாங்கத்தின் சட்டங்கள் பரிசீலனை செய்யப்படுவதிலும் நடைமுறையில் இச் சட்டங்கள் ஏற்கப்பட்டு அமல் செய்யப்படுவதிலும் பங்கு கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருப்பது தான் சோவியத் ஜனநாயகத்தை பொருட்படுத்துகிறது என்று லெனின் சுட்டிக் காட்டினர்.

சோவியத் யூனியனில் சட்டத்தின் முன் சமத்துவம் என்பது சகல பிரஜைகளுக்கும் சமமான உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்று புரிந்து கொள்ளப்பட்டதோடு மட்டுமின்றி சகல பிரஜைகளுக்கும் இவ்வுரிமைகள் உணரப்படுவதற்கு சட்ட பூர்வமாகப் பாடுபடும் வாய்ப்பும் அறிவும் உள்ளது என்பதாகும்.

சட்டவிடயத்தில் பிரஜைகளுக்கு போதமளிப்பதில் பிரதான கடமையாவது மக்கள் மத்தியில் உயர்முதிர்ச்சி மட்டம், ஒழுங்கு உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை தமது சொந்த நடத்தை சம்பந்தமாக மட்டுமின்றி பிறருடைய நடத்தை சம்பந்தமாகவும் ஊக்குவிப்பதாகும். சோவியத் மக்களுடைய வாழ்வின் அடிப்படைச் சட்டம் சோவியத் ஒன்றியத்தின் அரசியல் யாப்பாகும். அது மக்களுக்கு அளிக்கக் கூடிய, உத்தரவாதமளிக்கக்கூடிய அதன் பிரிவுகள் உரிமைகள், சுதந்திரங்களைப் பற்றிய போதம் சமூக உணர்வின் தேர்விற்கு ஓர் அளவு கோலாக மட்டுமின்றி ஒவ்வொரு பிரஜையும் சமூகத்தின் வாழ்க்கையில் செயலூக்கமாகப் பங்கு பற்றுவதற்கான ஒரு முக்கிய தூண்டு

கோலாக நாங்கள் கருதுகிறோம். எனவே நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய போதமும் ஆய்வும் சோவியத் பிரஜைகளை பொறுத்தமட்டிலும் அவர்களது கல்வியின் முழுத் தொகுப்பின் ஓர் அங்கப் பகுதியாகிவிட்டது.

இளைஞர் சம்பந்தப்பட்ட மட்டில் இது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் இந்த வயதுக் குழுவினர் மத்தியில் தான் ஒரு பொதுவான உலகக் கண்ணோட்டம் இடப்படுகிறது. ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. எனவே பள்ளியில் இருக்கும் போதே இளவயதினர் தமக்கு மட்டுமின்றி சமுதாயம் முழுமைக்குமே சட்டத்தை மதிக்கவும் அவற்றின் அவசியத்தையும் அனுகூலங்களையும் உணரவும் கற்றுக் கொள்கின்றனர்.

சட்டத்தைப் பற்றிய போதனை இரண்டாந்தர பள்ளியிலேயே தொடங்குகிறது. விசேஷ இரண்டாந்தர பள்ளிகளிலும் பொதுவாக உயர்கல்வி அமைப்புக்களிலும் தொடருகிறது. 15வது வயதில் மாணவர்கள் ''சோவியத் அரசு மற்றும் சட்டத்தின் அடிப்படைகள்'' என்னும் விஷயத்தை பொதுப் பள்ளிகளில் அறிமுகம் செய்து கொள்கின்றனர். உயர்தர மாணவர்களுக்கு சட்டத்தை பற்றிய படிப்பு விருப்பப்பாடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது, சோவியத் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய கல்வி தொழில் முறைப் பள்ளிகளிலும் கூட கற்பிக்கப்படுகின்றது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரசில் கூறப்பட்டது போல இது இளவயதினருக்கு சமூக உறவுகள் உலகத்தை அறிமுகம் செய்யும் ஒரு பாடத்திட்டமாகும், சமுதாய பொறுப்புணர்ச்சி, சோஷலிச உடைமை சம்பந்தமான கவனம், அதன் அவசியம் இயற்கைப்பாதுகாப்பு தார்மீகத் தரங்கள் போன்ற விஷயங்களில் விவாதத்தை ஊக்குவிப்பதற்காக அது அமோகமான வாய்ப்பை அளிக்கிறது. சோவியத் சமுதாயத்தின் நோக்கம் ஒவ்வொரு பிரஜைக்கும் சட்டத்தின் பால் மதிப்பளிக்கும் போக்கை கற்றுக் கொடுப்பதாகும். இவ்வாறு இந்த போதம்

அவ்வது நடத்தையின் அடிப்படையாக உருவாகும்' உற்பத்தித் துறையிலும் அன்றாட வாழ்விலும் சோஷலிஸ சமுதாயத்தின் சகல உறுப்பினர்களும் சட்டத்தை விருப்ப பூர்வமாகக் கடைப்பிடிப்பது சோவியத் அரசு மற்றும் சோவியத் சமுதாயத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்கும் பொது ஒழுங்கை பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் சோவியத் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஒரு முக்கிய நிபந்தனை ஆகும்.

இரண்டாந்தர உயர் கல்வி அமைப்புக்கள் சட்டத்தை பற்றியும் ஓர் அடிப்படை போதனையை அளிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு பிரஜையும் விரிவாக இருக்கின்ற சகல சட்டங்களையும் தெரிந்து வைத்திருப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. எனவே சோவியத் நிறுவனங்களில் தொழிற்சங்கங் களும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும் இலவசமான சட்ட ஆலோசனை சேவைக்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதன் மூலம் தொழிலாளிகள் சட்டத் தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும். தொழிலாளர் சம்பந்தமான சட்டங்கள் இதர சட்டங்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சௌகர்யமான நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர நிறுவனங்களிலும் அமைப்புக்களிலும் ஊழியர்களின் வழக்குரைஞர்கள் சட்டவிஷயங்கள் சம்பந்தமாக உழைப்புக் கூட்டுக்களில் அவ்வப்போது உரைநிகழ்த்துகின்றனர், தகவல்களைத் தருகின்றனர் தமது சட்ட அறிவை விரிவுபடுத்திக்கொள்ள விரும்புவர்களுக்கு படிப்புக் குழுக்களும் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

நாட்டின் சட்டவாக்க அடிப்படைகள் பற்றிய கல்விப் பணி ''ஸ்னானியா'' (அறிவு) எனும் தேசியக் கழகத்தின் மூலமாக பிரதானமாக நடத்தப்படுகிறது. இந்த தேசிய கழகம் சட்டத்துறை உட்பட பல்வேறு அறிவுத் துறை கிளைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட சோவியத் விஞ்ஞானிகள் பேரவையாளர்களின் சுயவிருப்ப அமைப்பாகும். 1976ல் இக்கழகத்தின் உறுப்பினர்கள் அரசாங்கம் சட்டம் சம்பந்தமான

பிரச்சினைகள் பற்றி சுமார் 15 லட்சம் பொது உரைகளை நிகழ்த்தினர். மேலும் அவர்கள் சட்ட விஷயங்கள் குறித்து எண்ணற்ற விவாத கூட்டங்களையும் கேள்வி பதில் மாலை நேர நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.

சோவியத் யூனியனில் மக்கள் பல்கலைக் கழகங்களையும் அவற்றின் சட்டதுறைகளையும் விரிவாகப் பயன்படுத்துகின்றனர் இவை உயர் கல்வி அமைப்புக்களின் நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளன: சட்டத் தொழிலில் அனுபவம் பெற்ற உறுப்பினர்களால் இச்சட்டப்போதனைகள் நடத்தப்படுகின்றன. இதில் சேர்ந்த படிப்பதற்கு கட்டணம் கிடையாது. தற்போது சோவியத் யூனியனில் இத்தகைய 1500 க்கு மேற்பட்ட மக்கள் பல்கலைக் கழகங்களும் பீடங்களும் உள்ளன.

சட்டத்தைப் பற்றி போதத்தை பரப்புவதற்கு பத்திரிகைகள், திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி ஆகிய வெகுஜனத் தகவல் சாதனம் விரிவாகப் பயன்படுத்துப்படுகின்றது. ''பிரஜையும் சட்டமும்'' என்னும் ஒரு நிரந்தரக் தொலைக்காட்சி வானொலி, பத்திரிகை நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது சட்டத்தையும் சட்டத்துறை முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களையும் விளக்குவதுடன் கூடவே நாட்டின் சட்டங்களின் மிகப் பொதுவான மீறல்களுக்கான காரணங்களைப் பற்றிய ஒரு பகுப்பாய்வை நிறைவேற்றுகிறது. சட்டத்துறை நிபுணர்களின் விமர்சனங்கள் செய்திகளைத் தெரிவிப்பதற்கு மட்டும்சுருக்கப்பட்டிருக்கவில்லை; மாறாக அவை வெளிப்படுத்தப்பட்ட பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது குற்றங்கள் நடை பெறுவதை எவ்வாறு தடுப்பது என்னும் பிரச்சினைகளை பற்றி ஆராய்கின்றன.

சட்டங்கள், சட்டத்துறை நூல்கள் பெருமளவில் வெளியிடப்படுகின்றன. ஒரே ஒரு உதாரணத்தைக் கூறுவதெனில் 1976ல் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் தொழிலாளர் சட்டம் 4,00,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. கடந்த பத்தாண்டுகளில் ''யூரிதி செஸ்கயாலித்தர

தாரா''பதிப்பகம் 2215 தலைப்புகளில் புத்தகங்களை யும் பிரசுரங்களையும் 5,68,00,000 பிரதிகளில் வெளியிட்டது.

நீதி அமைச்சு பிரஜையும் சட்டமும் என்னும் தனது சொந்த சஞ்சிகையை சாதாரண மக்களுக் காக வெளியிடுகிறது. இதன் விற்பனை 30 லட்சத் துக்கு மேற்பட்ட பிரதிகளாகும். சட்டத்தைப் பற்றிய தொழில்முறை விளக்க நூல்கள் தவிர, புத்தகக் கடைகளில் எவரும் சட்டங்களின் தொகுப்பு நூல்களையும், குறிப்பு நூல்கள், சாதாரண வாசகருக்காக எழுதப்பட்ட பிரசுரங் கள் அரசாங்கம், சட்டம், பற்றிய பாடப் புத்தகம் ஆகியவற்றையும் வாங்கலாம்.

தொழில்முறைக் குற்றங்கள் சோவியத் யூனிய னில் ஒழிந்து நீண்ட காலமாகி விட்டது. சட்டத் தைப் பற்றி மக்களுக்குப் போதனை அளிப்பது சகல விதமான குற்ற நடவடிக்கைகளையும் சட்ட மீறல் களையும் ஒழிப்பதற்கு உதவுகிறது என்பதை அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது. இறுதியாக வெகு முக்கியமாக சட்டம் மற்றும் ஒவ்வொரு வருடைய உரிமைகள் பற்றிய போதம் பிரஜை கள் சமுதாயத்தின் வாழ்க்கையில் மேலும் செயலூக்கமுடன் பங்கு கொள்வதற்கான அடிப் படையை நல்குகிறது.

தமது நாட்டில் தாமே எஜமானர்கள் என் னும் உணர்வை ஊக்குவிப்பதற்கும், ஒவ்வொரு துறையிலும் சகல அரசாங்க மற்றும் பொது விவகாரங்களில் தாம் பங்கு கொள்வதை ஊக்கு விப்பதற்கும் சோவியத் யூனியனில் பெரும் அக்கறை காண்பிக்கப்படுகிறது என்பதை வாசகர் களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு நாங்கள் இந்த சிறு பிரசுரத்தில் முயன்றுள்ளோம். தேசியப் பொருளாதாரத்தில் ஒருவர் செய்யும் வேலை எவ்வளவு எளியதாயிருந்தாலும் இவ்விஷயம் சம்பந்தப்பட்ட மட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். ஒவ்வொரு பதவியும் அரசாங்கப் பதவியே. ஒவ்வொரு அறிவு பூர்வமான ஆலோசனையும்,

புதிய சட்டங்களை வகுக்கும் போது நடப்புக் கொள்கையை வகுக்கும் போதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. நாடு தழுவிய விவாதம் என்னும் ஏற்பாட்டின் மூலம் கோடிக்கணக்கான மக்களின் கருத்துக்களை தெளிவுபடுத்துவதான து என்ன பணி செய்யப்பட்டுள்ளது. என்ன பணி செய்யப்பட்டு வருகிறது எதற்கு இன்னும் அதிகமான சிந்தனையும் கண்டிப்பான உழைப்பும் தேவை என்பதை இன்னும் அதிகத் தெளிவாகவும் இன்னும் அதிகரித்த துல்லியமாகவும் ஆக்குவதற்கு உதவுகிறது, சோஷலிச அரசு மக்களின் கூட்டுக் கருத்துக்கு மிகுந்த மதிப்பளிக்கிறது, இது வேறு விதமாக இருக்கமுடியாது. முதலாவதாக இக்கருத்து கடைப்பிடிக்கப்பட்ட அரசியல் பாதையின் சரியான தன்மை பற்றிய மதிப்பீட்டையும் அது முரணின்றி கடைப்பிடிக்கப்பட்டு வருவதன் அளவையும் கொண்டுள்ளது. இரண்டாவதாக, அது சோவியத் சமுதாயத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான—வேறு எந்த சமூக அமைப்பிலும் அடையமுடியாத ஒரு பொருளாயதத் தரத்தையும், வாழ்க்கை முறையையும்—கூட்டாகவும், தனியாகவும் மக்களுக்கு உருவாக்குவதற்கான புதிய கருத்துக்கள் ஆலோசனைகளின் ஒரு மூலாதாரமாகக் விளங்குகிறது.

9.00
2.30
1.90
~~12.20~~
1.75
13.95

1.75
.30
1.25
3.30

20.00
2.05
17.95

1.75
.30
2.05

## யூரி நவும்கின்

யூரி நவும்கின் (பிறப்பு 1938) ஒரு சோவியத் சட்ட நிபுணர், மாஸ்கோ பல்கலைக் கழக சட்டபீடத்தின் பட்டதாரி. அவரின் தொழில் முறை ஆர்வம் சட்டம், தர்க்கவியலைப் பற்றியது. நவும்கின் சோவியத் ஒன்றியத்தின் உள்துறை அமைச்சுப் பேரவையில் போதனையையும் ஆராய்ச்சியையும் செய்கிறார். அவர், விஞ்ஞானத்தில் (சட்டம்) வேட்பாளர் பட்டம் பெற்றவர், சோவியத் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினர். சட்டப் பிரச்னைகள் பற்றிய பல கட்டுரைகளையும் நூல்களையும் அவர் எழுதியுள்ளார். சோவியத் காவற்படை, தொழில் நுட்ப முன்னேற்றமும் குற்றுத்தை எதிர்த்துப் போராடுவது பற்றிய பிரச்னைகள் ஆகிய நூல்களும் இவற்றில் அடங்கும்.

---

பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்தை ரேட், கொழும்பு—10.